பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 01 செவ்வாய்க்கிழமை 14.04.2020 கதிர் 160

இனி இது ரகசியம் அல்ல!

தமது எண்ணப்படி விரைந்து பொதுத்தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்ன பகீரதப் பிரயத்தனம் பண்ணினாலும், சுமுக நிலைமை ஏற்பட்டு, நீதியான முறையில் தேர்தலை நடத்துவதற்குரிய சூழல் உருவாகாத வரை பக்கம் 02



'காலைக்கதிர்'
வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள்
அனைவருக்கும்
இனிய புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்

# கொரோனாவின் தாக்கம் குறைவடையும் சாத்தியம்

## சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் தகவல்

கொழும்பு, ஏப். 14

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் எதிர்வரும் நாள்களில் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி அடையாளம் காணப்படுபவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்களாக உள்ளனர். அவர்கள் ஏற்கனவே தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புகளை பக்கம் 02



## யாழ்ப்பாணத்தில் நேற்றும் யாருக்கும் தொற்று இல்லை

யாழ்ப்பாணம், ஏப்.14

யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்றுப் பரிசோதிக்கப்பட்ட எவருக்கும் கொரோனோ தொற்று இல்லை என வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கொரோனோ சந்தேகத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஐந்து பேருக்கும் பக்கம் 02

## கடுமையான ஊரடங்கு

கொழும்பு, ஏப்.14

நாடுமுழுவதும் நேற்றுத் திங்கட்கிழமை மாலை 6 மணி தொடக்கம் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிவரையான 24 மணித்தியாலயங்கள் ஊரடங்குச் சட்டத்தைக் கடுமையாக்கிச் சிறப்புப் பொலிஸ் நடவடிக்கையை முன்னெடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் பணித்துள்ளார்.

இந்தத் தகவலை பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

அத்தியாவசிய நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட ஊரடங்கு அனுமதிப்பத்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் பக்கம் 02

## மட்டக்களப்பிலிருந்து வெளியே நெல் கொண்டு செல்லத் தடை!

மட்டக்களப்பு, ஏப். 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வேறு மாவட்டங்களுக்கு நெல் கொண்டு செல்ல நேற்றில் இருந்து தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அரிசி ஆலைகள் திறந்து இயங்கவேண்டும் எனவும் மாவட்ட அரச அதிபர் கலாமதி பத்மராஜா தெரிவித்தனர்.

அரசினால் அனைத்து அரிசி ஆலைகளும் பக்கம் 02

## கொரோனா பாதித்தோர் 217ஆக உயர்வு

கொழும்பு, ஏப்.13

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 3 பேர் நேற்றுத் திங்கட்கிழமை இரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை பக்கம் 02

## யாழ். ஆலயங்களில் புத்தாண்டு வழிபாடு



யாழ்ப்பாணம், ஏப்.14

சார்வரி புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இந்து ஆலயங்களில் சிவாச்சாரியார்கள், அந்தணர்களால் சிறப்பு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டின் பக்கம் 02

## பருத்தித்துறை வைத்தியசாலை பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்

### கைவிடப்பட்டது மருத்துவர்கள் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்.14

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசனை, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பக்கம் 02

## கடல் உணவு மக்களுக்கு விநியோகம்



முல்லைத்தீவு, ஏப்.14

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்கள் பலர் பக்கம் 02

## 'காலைக்கதிர்' குறைந்த பக்கங்களுடன்

புத்தாண்டுப் பிறப்பை ஒட்டி வழமைபோல இம்முறையும் 'காலைக்கதிர்' நாளிதழின் பணியாளர்களுக்கு இன்று விடுமுறை. அதனால் இன்று 'காலைக்கதிர்' மாலைப் பதிப்பும் நாளை காலை இதழும் குறைந்த பக்கங்களுடன் பிரசுரமாகும்.

– நிர்வாகம்

## ரஞ்சன் ராமநாயக்க கைது!



கொழும்பு,ஏப்.14

பொலிஸ் அலுவலரின் கடமைக்கு இடையூறு செய்தார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுதிங்கட்கிழமை இரவு அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மிரிஹான பகுதியில் வீதித் தடையை ஏற்படுத்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## பொலிஸ் அதிகாரி விபத்தில் மரணம்!

கொழும்பு, ஏப்.14

ஹொரவபொத்தானை – அநுராதபுரம் பிரதான வீதி அலபெத்தாவ சந்தியில் நேற்று மாலை பக்கம் 02

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையம் இடமே கொடாது என்று நம்பகரமாக அறியவருகின்றது.

சுயாதீனத் தேர்தல் ஆணையர்கள் மூவருமே மிக உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கின்றனர் என்று கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி தமக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி உத்தரவுகளை விதித்தாலும் – தேர்தல் திகதிகளை அறிவித்தாலும் – அதைத் தேர்தல் ஆணையமும் தன்பாட்டுக்கு சூழ்நிலை உகந்ததல்ல என்று காரணம் காட்டி ஒத்திவைக்க முடியும், ஒத்திவைக்கும் என்று அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த இழுபறியால், உரிய காலத்தில் தேர்தல் நடத்த முடியாமல் போய் நாட்டில் அரசமைப்பு நெருக்கடி ஒன்று ஏற்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

அதைத் தவிர்ப்பதற்கு ஒரே வழி கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டி, ஏற்படக் கூடிய அரசமைப்பு நெருக்கடிகளைத் தவிர்க்கச் செய்யக் கூடிய அரசமைப்பு மாற்றங்களை உடன் செய்து கொள்வதுதான். ஆனால் தனது அரசுக்குப் பெரும்பான்மை இல்லாத நாடாளுமன்றத்தைத் கூட்டி, அதைக் கூட்டிய காரணத்தால் அங்கு பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் எதிரணிகள் அங்கு இழுக்கும் இழுப்புக்கெல்லாம் இழுபட ஜனாதிபதி கோட்டாபய தரப்பு விரும்பவில்லை. அதனால் நாடாளுமன்றை மீளக் கூட்ட அவர்கள் இணங்கவில்லை.

நாடாளுமன்றத்தை திரும்பக் கூட்ட ஜனாதிபதி விரும்பவில்லை.

இப்போதைய நெருக்கடிச் சூழலில் தேர்தலை நடத்துவது உசிதமானதல்ல என்று கருதும் சுயாதீனத் தேர்தல் ஆணையம் அதனால் தேர்தலை நடத்த விரும்பவில்லை.

இந்த நிலைமை நீடித்தால் உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படாமல் அரசமைப்பு நெருக்கடி உருவாவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

அந்தத் தவறு தன் மீது வராமல் தேர்தலை நடத்த மறுக்கும் தேர்தல் ஆணையம் மீது போடுவதுதான் கோட்டாபய தரப்பின் திட்டம்.

ஆனால், முந்திக் கொண்டு, அரசமைப்பு நெருக்கடி வரலாம், ஆகவே உயர்நீதிமன்றத்திடம் ஆலோசனை கேளுங்கள் என்று நேரத்துடன் கூறிவிட்டது தேர்தல் ஆணையம்.

அதை இப்போது ஜனாதிபதி தரப்பு என்ன கூறிச் சமாளித்தாலும் நாளைக்கு அரசமைப்பு நெருக்கடி வரும் போது –

*'பார்த்தீர்களா, இப்படி நெருக்கடி வரும் என்று எதிர்பார்த்துத்தானே உயர்நீதிமன்றத்திடம் பரிந்துரை கேளுங்கள் என்று கூறினோம்'* எனத் தேர்தல் ஆணையம் சொல்லமுடியும்.

இதற்குள் தேர்தல் ஆணையர் ரட்ண ஜீவன் கூல் இது விடயத்தில் தனது கருத்தை ஏற்கனவே வெளிப்படையாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு எழுத்தில் தெரிவித்துவிட்டார்.

எது, எப்படி என்றாலும் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நாளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசவிருக்கின்றார். அப்போது சில முடிவுகள் எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய தேர்தல் திகதியை அறிவிப்பது என்றாலும் கூட, அதற்கு முன்னர் நாட்டின் சுகாதாரப் பாதுகாப்புத் தொடர்பில் உரிய அதிகாரத் தரப்பிடமிருந்து எழுத்து மூல உறுதிப்பாட்டைத் தேர்தல் ஆணையம் கோரும் எனத் தெரிகின்றது.

'நாட்டில் தேர்தல் நடத்தலாம். கொரோனாத் தொற்றோ, பாதிப்போ பெருமளவில் ஏற்படவாய்ப்பில்லை' – என்று இப்போதைய நிலையில் தேர்தல் ஆணையகத்துக்கு உறுதியளிக்கக் கூடிய அதிகாரி யார் என்று தெரியவில்லை. அரசியல் தலைமையின் அழுத்தங்களுக்காக – விருப்பத்துக்காக – அப்படி எழுத்தில் கொடுத்து பின்னர் – பிற் காலத்தில் – தமது தலை மாட்டிக்கொள்ள வாய்ப்பளிக்கப் போகின்ற அதிகாரி யார் என்பது தெரியவில்லை.

அப்படி உரிய அதிகாரிகள் உறுதிப்படுத்தலைக் கொடுக்காத வரை தேர்தல் பிற்போடப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

அரசுத் தரப்பு, தேர்தலை நடத்துவதற்கு எவ்வளவு தூரம் தலை கீழாக நின்றாலும் இன்றைய நிலையில் அதற்கான வாய்ப்பு ஐம்பதுக்கு ஐம்பதுதான்.

ஊரடங்கு தளர்த்தப்படலாம். ஏன் நீக்கப்படலாம். மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படலாம். ஆனால் வேட்பாளர்கள் வீடு வீடாகப் பிரசாரம் செய்யவும், தேர்தல் கூட்டங்களை நடத்தவும் அனுமதிக்கக் கூடிய சாதக சூழ்நிலை வரும் வரைத் தேர்தலை நடத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்பதுதான் நிலைமை.

மீண்டும் அதே பழமொழி. *'அழுதும் அவளேதான் பிள்ளையைப் பெறவேண்டும்'*

ஜனாதிபதியும், அவரது அரசும் என்ன அழுத்தத்தைக் கொடுத்தாலும், தேர்தலை நடத்த வேண்டிய தரப்பு தேர்தல் ஆணையம்தான்.

அதன் ஆணையாளர்கள் மூவருமே Hard Nuts. கோட்டாபயவின் இராணுவத்தன அணுகுமுறை அவர்களிடம் பலிக்காது என்பதுதான் என் கணிப்பீடு.

சரி, என்ன நடக்கின்றது என்று பார்ப்போம்...!

–மின்னல்–

## மட்டக்களப்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து அரிசி ஆலை உரிமையாளர்களையும் சந்திக்கும் விசேட கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் இடம்பெற்றது.

அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் பட்டினியினால் பாதிக்கப்படாமலிருக்க அனைத்து அரிசி ஆலைகளும் திறக்கப்பட்டு இயங்கவேண்டும் எனவும், மாவட்டத்தின் அரிசித் தேவையைப் பூர்த்தி செய்த பின்னரே பிற மாவட்டங்களுக்கு அரிசி விநியோகிக்கவேண்டும் எனவும், அரசின் கட்டுப்பாட்டு விலைக்கே அரிசி விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் அரச அதிபர் அரிசி ஆலை உரிமையாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் மாவட்டத்தின் எந்த இடத்திலிருந்தும் வியாபாரிகள் அரிசியைக் கொள்வனவு செய்யமுடியும் எனவும், அதற்கான வசதிகள் செய்து தரப்படும் எனவும், அரிசி ஆலை உரிமையாளர்கள் இலாப நோக்கமற்று மக்களுக்கு சேவை வழங்க முன்வரவேண்டுமெனவும் அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

இந்த விசேட கூட்டத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்த், காணிப் பிரிவு மேலதிக அரச அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தன், மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர் லக்ஸ்ரீ விஜயசேன, இராணுவத்தின் 231ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் ஜனக பல்லேகும்புர, நுகர்வோர் அதிகார சபை மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பதிகாரியும் கிழக்கு மாகாண உதவிப்பணிப்பாளருமான ஆர்.எவ்.அன்வர் சதாத் மற்றும் மாவட்டத்தின் அரிசி ஆலை உரிமையாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடமாற்றுமாறு சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சு பணித்துள்ளது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் பதில் கடமைக்கு மருத்துவர் கமலநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசனை உடனடியாக இடமாற்றவேண்டும் என்று வலியுறுத்தி அந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர்கள், இன்று சேவைப் புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்திருந்தனர். எனினும் சுகாதார அமைச்சின் இந்த அறிவிப்பையடுத்து அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மருத்துவர்கள், கோரோனா நோய்த்தொற்று காணப்படும் இக்கட்டான இச்சூழ்நிலையில் வைத்தியசாலையில் தொடர்ந்து தமது பணிகளை முன்னெடுப்பதில் நிர்வாக ரீதியாகச் சிக்கல் நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

நீண்ட காலமாக வைத்தியசாலையில் காணப்படும் நிர்வாகம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் தற்போது உச்சமடைந்திருப்பதுடன் அனைத்து ஊழியர்களும் பாதுகாப்பான முறையிலும் ஒற்றுமையாகவும் கடமையாற்றுவதற்குத் தற்போதைய நிர்வாகம் ஒத்துழைக்காத நிலையில் தற்போதைய அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசனை உடனடியாக மாற்றம் செய்யவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசனை, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றுமாறும், அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறையான விசாரணையை ஒன்றை முன்னெடுக்குமாறும் சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

## கடுமையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறு ஊரடங்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட தேவைக்கு மாறாக வேறு நோக்கங்களுக்காக அதனைப் பயன்படுத்திய பல சம்பவங்கள் குறித்துப் பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

வேறு எந்த நோக்கத்திற்காகவும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்காக வழங்கப்பட்ட ஊரடங்கு உத்தரவைப் பயன்படுத்துவது சட்டத்துக்குப் புறம்பானதாகும்.

பாரம்பரிய புத்தாண்டு தினத்தன்று உறவினர்கள் வீடுகளுக்குச் செல்ல ஊரடங்கு அனுமதிப்பத்திரங்களை மக்கள் பயன்படுத்துவதற்கான போக்கு காணப்படுவதால், சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

ஊரடங்குச் சட்டங்களை மீறும் நபர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தை பின்பற்றுமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது – என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

## கடல் உணவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடல் உணவுகளை பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு இலங்கை இராணுவத்தினரும் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து வறிய மக்களுக்கு கடல் உணவுகளை வழங்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அந்தவகையில், நேற்று முதற்கட்டமாக 460 குடும்பங்களுக்கு தலா ஒன்று முதல் 2 கிலோ நிறையுடைய கடல் உணவுகள் வழங்கப்பட்டன.

இதில் இராணுவ அதிகாரிகள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர், பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் பொலிஸார் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு மக்களுக்கு கடல் உணவுகளை வழங்கினர்.

முள்ளியவளை, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு உள்ளிட்ட இடங்களில் நேற்று இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் இதற்கான கடல் உணவுகளை முல்லைத்தீவு கரைவலை உரிமையாளர்கள் இலவசமாக வழங்கியிருந்தனர்.

## யாழ்.ஆலயங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அசாதாரண சூழ்நிலையால் மருத்துவத் துறையினரின் ஆலோசனைகளுக்கு அமைய ஊரடங்குச் சட்டம் உள்ளிட்ட கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ள நிலையில் ஆலயங்களுக்குச் சென்று வழிபட முடியாத நிலையில் மக்கள் வீடுகளிலிருந்தே தமது குலதெய்வ வழிபாடுகளை முன்னெடுத்தனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சிவாச்சாரியார்களால் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன.

மங்களகரமான சார்வரி வருடம் சிசிர ருதுவுடன் உத்தராயணப் புண்ணிய காலம் நிறைந்த நேற்று திங்கட்கிழமை இரவு மணி 7.26 நிமிடங்களுக்கு பிறந்தது.

இனிவரும் நாள்களில் கைவிசேம், நாள் வேலை உள்ளிட்ட சம்பிரதாயங்கள் இடம்பெறவுள்ளன. எனினும் சம்பிரதாயங்களை வீட்டிலுள்ளவர்களும் மட்டுப்படுத்துமாறு அரசு கோரியுள்ளது.

## கொரோனாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருந்தவர்கள் என்ற அடிப்படையில் தனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

எனவே எதிர்வரும் நாள்களில் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறைவடைந்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. – என்றார்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி சுகாதார சேவைகள் பணிமனைப் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 12 பேருக்கும் நேற்று கொரோனோ பரிசோதனை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 17 பேரில் ஒருவருக்கும் கொரோனோ தொற்று இல்லை எனப் பரிசோதனைகள் உறுதிப்படுத்தியுள்ளன எனப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி குறிப்பிட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டும் மற்றும் தனிமைப்படுதலில் வைத்துள்ளவர்களுக்கும் பரிசோதிக்கப்பட்டவர்களில் இதுவரை 7 பேருக்கு மாத்திரமே கொரோனோ தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 12 நாள்களாக யாழ் மவட்டத்தில் புதிய கொரோனோத் தொற்றுநோயாளர் எவரும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

217ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

56 பேர் முழுமையாகச் சுகமடைந்து வீடுதிரும்பியுள்ளனர். 7பேர் உயிரிழந்துள்ளனர்.

154 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாடு முழுவதுமுள்ள 22 வைத்தியசாலைகளில் 147 பேர் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

## பொலிஸ் அதிகாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹொரவ பொத்தானை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அதே இடத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் விபுல ரத்னாயக்க (வயது–40) என்பவராவார்.

கடமையை முடித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வீடு சென்றபோது லொறியொன்று மோதியதினாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது ஹொரவபொத்தானை பிரதேச வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொரோனா மனித குலத்தின் பொது எதிரி அதை ஒழிக்க இலங்கைக்கு சீனா உதவும்!

## தமிழ், சிங்களப் புத்தாண்டுச் செய்தியில் அந்நாட்டுத் தூதுவர் உறுதியளிப்பு

மனித குலத்தின் பொது எதிரியான கொரோனா வைரஸை அழிக்க சீனா தன்னாலான அனைத்து உதவிகளையும் இலங்கைக்கு வழங்கி வருவதாக இலங்கைக்கான பதில் சீனத் தூதர் ஹூ வெய் தெரிவித்துள்ளார்.

மேலும் நம்பிக்கை நிறைந்த இலங்கையில் இரு நாட்டு உறவுகளும் புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ், சிங்களப் புத்தாணடை ஒட்டித் தாம் விடுத்த அறிக்கையிலேயே அவர் மேற்படி விடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் பாரம்பரிய சிங்களம் மற்றும் தமிழ் புத்தாண்டை ஒட்டி இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் சார்பில் இலங்கை மக்களுக்கும் சீன – இலங்கை உறவின் வளர்ச்சிக்கு ஆதரவு அளித்து வருகின்ற பல்வேறு துறையினருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

சீன – இலங்கை மக்களைப் பொறுத்தவரை, 2019 ஆம் ஆண்டு சிறப்பு ஆண்டாகும். சீன – இலங்கை உறவு சீராக வளர்ந்து வருகிறது.

இந்தப் புத்தாண்டு சிறப்பு என்ற போதிலும் துணிவுடன் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் மேலும் வலிமையாக உள்ளது.

கொரோனா வைரஸ் மனித குலத்தின் பொது எதிரியாகும். தற்போது, வைரஸ் பரவலைத் தடுக்கும் முக்கிய கட்டத்தில் இலங்கை உள்ளது.

இலங்கையின் உண்மையான நண்பர் என்ற வகையில் சீனா தன்னாலியன்ற அனைத்து உதவிகளையும் அளித்து வருகிறது.

இந்த முக்கிய காலத்தில், இலங்கை மக்களுடன் இணைந்து இப்போராட்டத்தில் கூட்டாக வெற்றி பெற சீனா விரும்புகிறது.

இலங்கையில் நம்பிக்கை நிறைந்துள்ளது. சீன – இலங்கை உறவும் புதிய அத்தியாயம் திறந்து வைக்கப்பட்டு வருகிறது.

அனைவருக்கும் மீண்டும் புத்தாண்டு நல் வாழ்த்துக்களையும், சீன – இலங்கை நட்புறவு நீண்டகாலம் நிலவ வாழ்த்துக்களையும் தெரிவிக்க விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



## ரயில் ஓடாததால் தண்டவாளங்கள் பற்றைகளால் மூடப்படும் நிலைமை

நாட்டில் உள்ள ரயில் பாதைகள் பற்றைகளால் மூடும் நிலைக்கு வந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாட்டில் ஊரடங்கு சட்டம் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனால் மூன்று கிழமைகளுக்கு மேலாக ரயில் சேவைகளும் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளன.

அதனால் நாட்டில் உள்ள ரயில் பாதைகள் பற்றைகளால் மூடும் நிலைக்கு வந்துள்ளன என சமூகவலைத்தளங்களில் பலரும் படங்களைப் பகிர்ந்து வருகின்றனர்.



## நீர்கொழும்பில் முன்னாள் பேராயரின் இறுதி நிகழ்வில் மஹிந்தர், பந்துல





தனது 87 வயதில் கடந்த வெள்ளிக்கிழமை இறையடி எய்திய, கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் ஏழாவது பேராயராக பதவி வகித்த அதி வணக்கத் திற்குரிய நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகையின் பூதவுடல், நேற்று நீர்கொழும்பு புனித மரியாள் தேவாலயத்தில் இறுதி நல்லடக்க திருப்பலி நடைப்பெற்று அரச மரியாதையுடன் தேவாலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையில் நடைபெற்ற இறுதிச் சடங்கு நிகழ்வில, ; நாட்டின் பல பிரதேசங்களிலிருந்தும் வருகைதந்த கத்தோலிக்க ஆயர்கள் மற்றும் குருக்கள் பங்குபற்றினர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சிலர் மாத்திரமே இறுதி நிகழ்வில் பங்குபற்றினர்.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெரணான்டோ, இராஜாங்க அமைச்சர் நிமல் லன்ஸா, நீர்கொழும்பு மேயர் தயான் லன்ஸா உட்பட முக்கியஸ்தர்கள் சிலர் இறுதி திருப்பலி நிகழ்வில் பங்குபற்றினர்.

அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரங்கல் உரை நிகழ்த்தினார்.

## சட்டத்துக்கு முரணாக மதுபானம் விற்பனை

### யாழ்.நகரில் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ்ப்பாணம் கன்னாதிட்டிப் பகுதியில் வீடொன்றில் சட்டத்துக்குப் புறம்பாக மதுபான விற்பனையில் ஈடுபட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து 78 போத்தல்கள் (கால் போத்தல் அளவுடைய) மதுபானம் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழுள்ள சிறப்பு புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் போதைத் தடுப்புப் பொலிஸாருடன் இணைந்து இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரை இன்று யாழ்ப்பாணம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரம்பலைக் கட்டுப்படுத்த ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மதுபான சாலைகளை காலவரையறையின்றி மூடுவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்தநிலையில் சட்டத்துக்கு புறம்பாகவும் அதிக விலையிலும் மதுபானம் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது பார்வை
உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

# தமிழரின் காலக் கணிப்பீடு

தங்கு தடையின்றி ஒடுகின்றது காலநதி. இடையீடின்றிச் சதா சுழன்று கொண்டிருக்கின்றது காலச்சக்கரம். அந்தக் காலத்தில் நிகழ்கின்றது எமது வாழ்க்கைப் பயணம்.

இயற்கையோடும், காலத்தோடும் இயைந்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அவர்களின் காலக் கணிப்பீடும் கூட இயற்கையோடு இயைந்ததுதான்.

அந்தக் காலக் கணிப்பீட்டில் புதிய வருடம் பிறந்துள்ளது. அந்தக் கணிப்பீடும் கூட விஞ்ஞானமும் மெய்ஞானமும் கலந்தமையால் உருவானதே.

உலக இயக்கத்தின் முழுமுதல் காரணன் சூரியன்தான். அவனின்றி அணுவும் அசையாது; அவனியும் அசையாது.

நமது சூரியக் குடும்பத்தின் தலைமைக் கோள் அவனே. அவனை மையமாக வைத்துத்தான் காலக் கணிப்பீட்டை வகுத்தார்கள் தமிழர்கள்.

தமிழர்களின் காலப் பிரிப்பின் அடிப்படை, நாளிலிருந்து ஆரம்பிக்கின்றது.

ஒரு நாளை ஆறு சிறும் பொழுதுகளாகப் பிரிக்கும் தமிழர்கள், அதேபோல ஒரு முழு வருடத்தையும் ஆறு பெரும் பொழுதுகளாகவும் வகுத்தனர்.

ஒரு நாளை வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, சாமம் என ஆறு பொழுதுகளாக வகுத்தனர்.

அதுபோலவே ஒரு முழுவருடத்தை இளவேனில் (சித்திரை, வைகாசி) முதுவேனில் (ஆனி, ஆடி), கார் (ஆவணி, புரட்டாதி), கூதிர் (ஐப்பசி, கார்த்திகை), முன்பனி (மார்கழி, தை), பின்பனி (மாசி, பங்குனி) என ஆறு பெரும் பொழுதுகளாக வகுத்தனர் நம் முன்னோர்.

ஒரு தினத்துக்கு அறுபது நாழிகை என்று கணக்கு வகுத்தனர். அதன்படி ஒரு நாழிகை என்றால் 24 நிமிடங்கள். இது 24 மணி நேரம் கொண்ட ஒரு தினத்துக்கு கனகச்சிதமாகப் பொருந்துவதும் கணக்கில் கொள்ளத்தக்கது.

தமிழ் காலக்கணக்கில் வருடங்களும் கூட அறுபது ஒழுங்கு முறை கொண்டவைதான். அந்த வரிசையில் இன்று பிறந்திருப்பது 'சார்வரி' வருடம்.

தமிழர்களின் காலக் கணக்கில் இந்த அறுபது என்ற எண் முக்கியமானது.

இப்படி வருடங்களின் கணக்கை அறுபது வருடச் சுற்றாக அவர்கள் சேர்த்தமைக்கு மெய்ஞான ரீதியான காரணங்கள் உண்டு. அதுவும் கூட கோள்களின் நகர்வின் அடிப்படையில் அமைந்ததே.

எவ்வாறு எண் கணிதத்தில் நூறு அல்லது நூற்றாண்டு முக்கியத்துவம் பெறுகின்றதோ அது போன்றதுதான் காலக் கணிப்பில் இந்த அறுபது வருடச் சுற்று.

சூரியனில் இருந்து நாம் வாழும் பூமிப்பந்தின் நகர்வை ஒட்டி காலத்தை வகுத்த நம்முன்னோர், எமது கோள்களின் குடும்பத்தின் தலை மகனான சூரியனை ஒட்டி, ஏனைய கிரகங்களின் நகர்வைக் கணக்கில் எடுத்து, இந்த அறுபது வருடச் சுற்றைத் தீர்மானித்தார்கள்.

நமது சூரியக் குடும்பக்கோள்களில் முக்கிமானவை வியாழனும், சனியும்.

இவற்றிலே சனி, சூரியனைச் சுற்றி வருவதற்கு 30 வருடங்கள் எடுக்கின்றது. அதுபோல வியாழன் பன்னிரண்டு வருடங்கள் எடுத்துக்கொள்ளும்.

இந்தப் பிரதான கோள்கள் இரண்டும் முன்னைய நிலையில் மீண்டும் ஒருங்கிணைவதற்கு – ஒருங்கிசைவதற்கு – சரியாக அறுபது ஆண்டுகள் எடுக்கும். அதாவது அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அவை முன்னைய அதே நிலையில் நிலைகொள்ளும் வாய்ப்புக் கிட்டும். அதை வருடச் சுற்றுக்கான அடிப்படையாக வகுத்தார்கள் வான சாஸ்திரத்திலும் விஞ்சி நின்ற நம் முன்னோர்கள்.

தமிழர்களின் காலக்கணிப்பு முறை மிக ஆழமானது. பிரமாண்டமானது. அர்த்தங்கள் நிறைந்தது.

அது பற்றிய ஆய்வே பெருங்கடல்.

குழி, கண்ணிமை, கைந்நொடி, மாத்திரை என்று தொடங்கி விநாடி, நாழிகை, ஓரை, முகூர்த்தம், சாமம், சிறும்பொழுது, பொழுது நாள், வாரம், திங்கள், மண்டலம், பெரும்பொழுது, அயனம், வருடம், யுகம் (ஊழி) என்று விரித்தால் அது பெரும் சமுத்திரமாகும்.

அதுபற்றிய ஒரு சிறு மோலோட்டக் குறிப்பே இதுவரை நாம் பார்த்தது.

அத்தகைய பெருமை மிகு வானியல் அறிவுபூர்வ தெளிவு கொண்ட நம்முன்னோர் வகுத்தவை வல்லாண்மை மிக்கவை என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

# அடுத்த 2 வாரத்துக்கு ஒத்துழைத்தால் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பலாம்

## அரச தரப்பிலிருந்து தகவல்

கொழும்பு, ஏப். 13

இறுக்கமான சுகாதார மற்றும் சட்ட கட்டமைப்பில் தொடர்ந்தும் செயற்பட்டால் கொவிட் - 19 கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலை கட்டுப்படுத்த மேலும் இரு வார காலம் போதுமானதாக இருக்கும். ஏப்ரல் மாத இறுதியுடன் நாட்டில் பல மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்த முடியும் என அரசு மற்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் கொவிட் - 19 கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலை கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய அரசு கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் இன்னும் எத்தனை நாட்கள் இவ்வாறான நிலைமைகள் முன்னெடுக்கப்படும் என்பதற்கு பதிலளித்த சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கூறுகையில் -

மிகவும் கடினமான கால கட்டத்தில் நாம் இன்று முகங்கொடுத்து வருகின்றோம். நாளாந்தம் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது.

எனினும் தனிமைப்படுத்தல் முகாம்களில் உள்ளவர்கள் தவிர்ந்து ஏனையவர்கள் கொரோனா வைரஸ் தொடர்பில் பாதிக்கப்பட்டதற்கான அறிகுறிகள் இதுவரை தென்படாத வண்ணமே உள்ளதாக வைத்திய அதிகாரிகள் கூறுகின்றனர்.

இது அரசு மற்றும் சுகாதார அதிகாரிகள் மக்களை பாதுகாக்க எடுத்த வேலைத்திட்டத்தின் பிரதிபலன் என்றே கூறவேண்டும்.

எவ்வாறு இருப்பினும் இப்போது நாம் முன்னெடுத்து வருகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவேண்டும்.

அவ்வாறு நாம் முன்னெடுத்தால் மட்டுமே எம்மால் வெகு சீக்கிரமாக இந்த நிலைமைகளில் இருந்து விடுபட முடியும். எவ்வாறு இருப்பினும் இந்த மாத இறுதிக்குள் வெளி மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்த முடியும் என்ற நிலைப்பாடும் உள்ளது.

ஆகவே அடுத்த இரண்டு வார காலம் மக்கள் எமக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கி சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி செயற்படவேண்டியது கட்டாயமாகும் என்றார்.

இது குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவிக்கையில் -

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலானது குறைந்ததாக கருத முடியாது. ஆனால் நாம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களின் மூலமாக நிலைமைகளை இன்றுவரை கட்டுபாட்டில் வைத்திருகின்றோம்.

ஆகவே இதே நிலைமை மேலும் இருவார காலமேனும் தொடர வேண்டும். அவ்வாறு கடுமையான சுகாதார வேலைத்திட்டங்களை முன்னெடுத்தால் மட்டுமே எம்மால் நாட்டின் நிலைமைகளை சரிசெய்ய முடியும்.

ஆகவே அடுத்த இரண்டு வாரகாலம் சுகாதார வேலைத்திட்டங்களை மிகச் சரியாக முன்னெடுத்தால் ஏப்ரல் மாதம் இறுதிக்குள் நாட்டில் பல பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கையை வழமைக்கு கொண்டுவர முடியும். அதற்கான வேலைத்திட்டங்களை அரசின் ஒத்துழைப்புடன் செய்து வருகின்றோம் - என்றார்.

# 'தாயகம்' அறக்கட்டளையின் நீளும் உதவிக்கரம்










தொடர் ஊரடங்கு உத்தரவால் வாழ்வாதாரம் இன்றி வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கு அவசர, அவசிய நிவாரணங்களை வழங்கும் தன் பணியை யாழ்ப்பாணத்தில் இயங்கும் 'தாயகம்' அறக்கட்டளை நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

இந்தத் தொடர் உதவி நடவடிக்கையில் இரண்டாம் கட்டமாக நேற்றும் முன்தினமுமாக யாழ் கிராமசேவகர் பிரிவுகளில் மொத்த 650உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. அதில் 200 பொதிகள் கொழும்பு தேவி ஜுவல்லரி அனுசரணையுடன் வழங்கப்பட்டன. இரண்டாம் கட்ட உலர் உணவு பொருள்களை 'தாயகம்' அறக்கட்டளை நிறுவுநர் செல்லையா வீரசிங்கம் சிறிதரன் பயனாளிகளுக்கு வழங்குகின்றமையைப் படங்களில் காணலாம்.

நாளை
15.04.2020
புதன்கிழமை
நட்சத்திரம்:உத்தராடம் பி.இ.01.35
திதி:அட்டமி 09.59 வரை
இராகுகாலம்:12.04-01.03.04
சுப நேரம்:04.34-06.04

### கொரோனாவால் ஒரு மாதத்தின் பின் சந்தித்த

# துருக்கி நாட்டு தாய் - மகள் பாசத்தால் நெகிழும் உலகு



துருக்கியில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் தனது தாயை ஒரு மாத இடைவெளிக்குப் பின் கண்ட மகள் கதறி அழுது கட்டியணைத்துக் கொண்ட நெகிழ்ச்சி வீடியோ சமூக ஊடகங்களில் மிக வேகமாகப் பரவி வருகிறது.

துருக்கியில் மருத்துவ செயலாளராகப்பணியாற்றும் ஒஸ்ஜி கொகேக்குக்கும் அவரது மகளுக்கும் இடையிலான பாசப் போராட்டமே இது. துருக்கியில் கொரோனா தொற்று ஏற்பட்டதையடுத்து, இவர் கடந்த ஒருமாத காலமாக கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். இதனால் பாதுகாப்பு கருதி தனது 6 வயது மகளை பாட்டி வீட்டில் ஒப்படைத்திருந்தார்.

இந்நிலையில் நீண்ட இடைவெளிக்குப் பின் தன் மகளுடன் நேரத்தை செலவிட முடிவு செய்த ஒஸ்ஜி, தன் மகளுக்கு நேரில் இன்ப அதிர்ச்சி அளிக்க முடிவு செய்தார். இதனையடுத்து மகள் சைக்கிள் ஓட்டிக்கொண்டிருந்த பகுதிக்கு சென்ற ஒஸ்ஜியை பார்த்தவுடன் செய்வதறியாமல் நின்ற மகள், சைக்கிளை சாலையோரம் நிற்க வைத்து விட்டு, கோபத்துடன் ஒஸ்ஜிக்கு அருகில் சென்று தாயை கட்டியணைத்து குமுறி அழத் தொடங்கினாள்.

காண்போரை கண்கலங்க வைக்கும் இவர்களது பாசப்பிணைப்பை உணர்த்தும் வீடியோ தற்போது இணையதளத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

# புலம்பெயர் தொழிலாளர்களால் கொரோனா எளிதில் பரவலாம்!

### உலக வங்கி எச்சரிக்கை

புலம்பெயரும் தொழிலாளர்கள் அவர்களது சொந்த ஊர்களுக்குச் செல்லும் போது கொரோனா வைரஸ் மேலும் எளிதாகப் பரவும் அபாயம் உள்ளதாக உலக வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.

தெற்காசியப் பொருளாதாரத்தில் கொரோனாவின் தாக்கம் எனும் பெயரில் ஆய்வறிக்கை ஒன்றை உலக வங்கி வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:-

உலகின் மிக அதிக மக்கள் தொகை அடர்த்தி கொண்ட பகுதிகளில் தெற்காசியாவும் ஒன்று. நகர்ப்புறங்கள், மற்றும் உள்நாட்டில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பது இந்தப் பகுதியில் மிகப் பெரிய சவாலாகும். இங்கு புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மூலம் கொரோனா வைரஸ் தொற்று குடிசைப்பகுதிகளில் வசிக்கும் மக்களிடையேயும் எளிதாகப் பரவுகிறது.

இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பொதுபோக்குவரத்தை நிறுத்துவதற்கு முன்னர் போதிய கால அவகாசம் வழங்கப்படவில்லை. அதனால் ஊரடங்குக்கு முன்னர் புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும் முடியவில்லை.

ஊரடங்கு அறிவிக்கப்பட்ட சில நாள்களில், தொழில் மற்றும் வருமானம் இல்லாத புலம்பெயரும் தொழிலாளர்கள் அவர்களது சொந்த ஊர்களுக்குச் செல்ல கூட்டமாக கூடினர். மேலும் அவர்கள் அனைவரும் போதிய சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கவில்லை.

அவர்கள் பலவந்தமாகத் தமது ஊர்களுக்குத் திரும்பிச் சென்றமையால் கொரோனா வைரஸ் மேலும் எளிதாக பரவும் அபாயம் உள்ளது. சீனா மற்றும் அமெரிக்காவை விட தெற்கு ஆசிய நாடுகளில் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் குறைவாகவே உள்ளனர். இது உயிரிழப்புகளின் எண்ணிக்கையை வெகுவாக குறைக்கும். எனினும் மற்ற நாடுகளை போல மருத்துவ உபகரணங்கள்(சானிடைசர், முககவசம், வெண்டிலேட்டர்) இங்கு போதியளவில் எளிதாக கிடைப்பதில்லை. - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 19 லட்சம் கொரோனா தொற்று

### ஒரு லட்சத்து 14 ஆயிரம் பேர் சாவு!



கொலைகாரக்கொள்ளைநோயான கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை 19 லட்சத்தையும் தாண்டி வேகமாக முன்னேறி வருகின்றது. அவர்களில் 4 லட்சத்து 41 ஆயிரம் பேர் தொற்றிலிருந்து விடுபட்டுக் குணமடைந்துள்ளனர். எனினும் ஒரு லட்சத்து 18 ஆயிரம் பேர் இதுவரை உயிரிழந்திருக்கின்றனர்.

கடந்த டிசெம்பர் மாதம் சீனாவின் ஹூபேய் மாகாணத்திலுள்ள வுஹான் நகரத்தில் தொடங்கியது கொரோனாவின் தாக்குதல் மெல்ல அங்கிருந்து ஏனைய நாடுகளுக்குப் பரவிய இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கடந்த ஒரு மாத காலத்திற்குள் மிகப் பெருமளவிற்கு எகிறியது.

இதில் ஐரோப்பிய நாடுகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் 210 நாடுகள் மற்றும் தனியாட்சி நிலங்களில் இதுவரை 19 லட்சத்து 12 ஆயிரத்து 438 பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. ஐரோப்பாவில் மட்டும் இந்த எண்ணிக்கை 9 லட்சத்து 4 ஆயிரத்து 862.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையிலும் ஐரோப்பாவே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களில் சரி அரைவாசிக்கும் அதிகமானவர்கள், 79 ஆயிரத்து 570 பேர் ஐரோப்பியர்கள்.

ஐரோப்பாவுக்கு அடுத்து மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது அமெரிக்கா. தனியொரு நாடாகவும் மிக மோசமான பாதிப்பு அமெரிக்காவுக்கே ஏற்பட்டுள்ளது. அங்கு 5 லட்சத்து 79 ஆயிரத்து 476 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 23 ஆயிரத்து 262 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று மட்டும் அங்கு ஆயிரத்து 147 பேர் உயிரிழந்தனர். 19 ஆயிரத்து 186 பேருக்குப் புதிதாக நோய்த் தொற்றுக் கண்டறியப்பட்டது.

எனினும் ஆறுதலளிக்கும் விடயமாக, நீண்ட காலமாக உயிரிழப்புப் பட்டியலில் முதலிடத்தில் இருந்து வந்த இத்தாலியில் உயிரிழப்பு எண்ணிக்கை குறையத் தொடங்கியுள்ளது. 20 ஆயிரத்து 465 பேர் அங்கு இதுவரையில் உயிரிழந்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டில் 17 ஆயிரத்து 489 பேரும் பிரான்ஸ் நாட்டில் 14 ஆயிரத்து 967 பேரும் பிரிட்டனில் 11 ஆயிரத்து 329 பேரும் உயிரிழந்திருக்கின்றனர்.

உலகம் முழுவதும் பாதிப்புக்குள்ளானவர்களில் 52 ஆயிரம் பேரின் நிலைமை மிக மோசமாக இருப்பதன் காரணத்தால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

# மக்களுக்குத் தேவையானவை ரொட்டிகளே தவிர துவக்குகள் அல்ல; நம்பிக்கையின் தூதராக இருங்கள்!

### பாப்பரசர் பிரான்ஸிஸ் கத்தோலிக்க மக்களுக்கு அழைப்பு



மக்களுக்கு தேவை ரொட்டிகளே தவிர, துப்பாக்கிகள் அல்ல என்று தெரிவித்தார் பாப்பரசர் பிரான்சிஸ். உயிர்த்த ஞாயிறு வழிபாடுகளுக்குப் பின்னர் பேசிய அவர் கொரோனா பற்றிய அச்சத்திற்கு அடிபணியாமல், நம்பிக்கையை பரப்பும் தூதர்களாக இருக்க வேண்டுமெனவும் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

நேற்றைய உயிர்த்த ஞாயிறு (ஈஸ்டர்) பண்டிகையையொட்டி அவர் விடுத்த செய்தியில் இதனை அவர் தெரிவித்திருந்தார்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமையிடமான வத்திக்கான் நகரில் பாப்பரசர் பிரான்சிஸ் உயிர்த்த ஞாயிறு திருநாளை முன்னிட்டு சிறப்பு பிரார்த்தனை நடத்தினார்.

ஒவ்வொரு ஆண்டும் வத்திக்கான் நகரில் உள்ள புனித பீற்றர் சதுக்கத்தில் நடைபெறும் இந்த சிறப்புப் பிரார்த்தனையில் உலகெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கான கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பங்கேற்பது வழக்கம்.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக வத்திக்கான் நகரில் மக்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால், நேற்றைய பிரார்த்தனையில் மக்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை.

மூத்த கர்தினால்கள் உட்பட 12 பேர் மட்டும் பாப்பரசர் பிரான்சிஸ் தலைமையிலான பிரார்த்தனையில் பங்கேற்றனர். மேலும் ஞானஸ்தானம் உள்ளிட்ட வழக்கமான மதச் சடங்குகளும் கைவிடப்பட்டன.

அதேசமயம் பாப்பரசர் பிரான்ஸிசின் பிரார்த்தனை நேரலையில் ஒளிபரப்பப்பட்டது. பிரார்த்தனையின் முடிவில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

எதிர்காலத்தை பற்றியும், மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய அனைத்தைப் பற்றியும் பயம் உள்ளது. இது ஒரு வேதனையான நினைவு. இருண்ட நேரம். நமது நம்பிக்கை குறைக்கப்படுகிறது. இவை அனைத்தும் உண்மைதான்.

ஆனால் இந்த தருணத்தில் கடவுள் நமக்கு திரும்ப திரும்ப சொல்லும் வார்த்தைகள் இவைதான். பயப்படாதீர்கள், பயப்பட வேண்டாம். இது இன்று நமக்கு உரைக்கப்படும் நம்பிக்கையின் செய்தி.

எனவே மக்கள் கொரோனா பற்றிய அச்சத்திற்கு அடிபணிய வேண்டாம். மாறாக இந்த நேரத்தில் மற்றவர்களுக்கு நம்பிக்கையை பரப்பும் தூதர்களாக இருக்கவேண்டும்.

மரணத்தின் அழுகைகளை மௌனமாக்குவோம். இனிபோர்கள் இல்லையென்ற நிலையை அடையவேண்டும். ஆயுதங்களை உற்பத்தி செய்வதையும், ஆயுத வர்த்தகத்தையும் நிறுத்திவிட்டு ஏழைகளுக்கு உதவுவோம்.

ஏனெனில் மக்களுக்கு தேவை ரொட்டிகளே தவிர, துப்பாக்கிகள் அல்ல. கருக்கலைப்பு மற்றும் அப்பாவி உயிர்களை கொல்வது முடிவுக்கு வரட்டும். எதுவும் இல்லாதவர்களின் வெற்றுக் கைகளை நிரப்ப போதுமான அளவு வைத்திருப்பவர்களின் இதயங்கள் திறந்திருக்கட்டும். - இவ்வாறு போப் ஆண்டவர் பிரான்சிஸ் பேசினார்.

# கொரோனா சவாலை எதிர்கொள்வதற்கு பெரும் எடுப்பில் தயாராகின்றது இந்தியா

## நாடு முழுவதும் பரிசோதனையை விரிவுபடுத்தவும் நடவடிக்கை என மத்திய சுகாதாரத்துறை தகவல்

புதுடெல்லி,ஏப்.14

கொரோனா நிலைவரம் தொடர்பாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சக இணைச் செயலாளர் லாவ் அகர்வால் டெல்லியில் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

நாட்டில் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும் பட்சத்தில், அதை சமாளிக்க கூடுதல் முன் னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசு, தனியார் மருத்துவக் கல்லூரி களில் கொரோனா பரிசோதனை வசதியை விரிவுபடுத்த துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக, எய்ம்ஸ் உள்ளிட்ட 14 உயர் மருத்துவ நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**கொரோனா பரிசோதனை**

நோய்த்தொற்று பரவுவதை தடுத்தல், சமூக இடைவெளியை கடைபிடித்தல் ஆகியன தொடர்பான நடவடிக்கைகளை நாம் தொடர வேண்டிய அவசியம் நிலவுகிறது. ஊரடங்கு அமலில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் சமூக இடைவெளியை கடைப்பிடிப்பதை பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். கொரோன நோய்த்தொற்றை எதிர்கொள்வதில் இதுவே சிறந்த வழிமுறை யாகும்.

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பிரத்தியேக மருத்துவ மனைகள், தனிமைப் படுக்கைகள், தீவிர சிகிச்சை பிரிவு, தனிமைப்படுத்தும் வசதி உள்ளிட்ட ஏற்பாடுகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

நாடு முழுவதும் 601 பிரத்தியேக மருத்துவமனைகளில் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 980 தனிமைப் படுக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனை மேலும் அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அரசு மருத்துவமனைகள், இராணுவ மருத்துவமனைகள், ரயில்வே உள்ளிட்டவை அரசின் முயற்சிகளுக்கு பங்களித்து வருகின்றன. இதுவரை 5 ஆயிரம் ரயில் பெட்டிகள் தனிமை வார்டுகளாக மாற்றப் பட்டுள்ளன.

கொரோனோ நோய்த் தொற்றுக்காக 40 க்கும் மேற்பட்ட தடுப்பு மருந்துகளை உருவாக்க ஆராய்ச்சி நடைபெறுகிறது. - இவ்வாறு அவர் கூறினார்.

# இன்று காலை நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி உரையாற்றுகிறார்

## ஊரடங்கை நீடிக்க வாய்ப்பு



கொரோனா வைரஸ் பரவி வரும் நிலையில் நாடு முழுவதும் ஏப்ரல் 14 ஆம் திகதி வரை 21 நாள்கள் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் அத்தியாவசிய காரணங்கள் தவிர, வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம் என உத்தரவிடப்பட்டு, இந்த உத்தரவு தீவிரமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டன.

மாநில முதலமைச்சர்கள், அரசுத் துறை உயர் அதிகாரிகளுடன் பிரதமர் மோடி தொடர்ந்து ஆலோசனை நடத்தி, உரிய அறிவுறுத்தல்களை வழங்கி வந்தார்.

இது ஒருபுறமிருக்க, கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து உயர்ந்தது. இதனால் ஊரடங்கை மேலும் நீடிப்பது குறித்து பல்வேறு மாநில முதலமைச்சர்களும் மருத்துவ வல்லுநர்களும் கூறி வந்தனர். சில மாநிலங்களில் ஊரடங்கு நீடிக்கப்பட்டது.

நாடு முழுவதும் 21 நாள்கள் ஊரடங்கு இன்றுடன் முடிவடைய உள்ள நிலையில், பிரதமர் மோடி இன்று காலை 10 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்போது, ஊரடங்கு நீடிப்பு குறித்து அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், கொரோனா தடுப்பு பணிகள் மற்றும் நிவாரணம் குறித்தும் அவர் அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றைய நிலைவரப்படி இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 9,152 ஆக உயர்ந்துள்ளது. பலி எண்ணிக்கை 308 ஆக உயர்ந்துள்ளது.

## குழந்தை பிறந்த 22 நாளில் பணிக்கு திரும்பிய ஐ.ஏ.எஸ்



விசாகப்பட்டினம் மாநகராட்சி ஆணையரான ஸ்ரீஜனா நிறைமாத கர்ப்பிணியாக இருந்த நிலையில் கடந்த மாதம் வரை பணியில் ஈடுபட்டிருந்தார்.

இந்நிலையில் குழந்தை பிறந்த 22 ஆவது நாளில் மீண்டும் பணிக்கு திரும்பியுள்ள ஸ்ரீஜனா கொரோனா பாதிப்பு காரணமாக ஊரடங்கு அமலில் உள்ளமையால், காலை முதல் இரவு வரை அலுவலகத்திலேயே இருந்து அதிகாரிகளுக்கு தகுந்த உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார்.

குழந்தையை வீட்டில் விட்டுவிட்டு வருவது பற்றி ஸ்ரீஜனாவிடம் கேட்டதற்கு, தனது தாயும், கணவரும் குழந்தையை கவனித்துக்கொள்வதாகவும், பால் புகட்டுவதற்காக 4 மணி நேரத்திற்கு ஒரு முறை வீட்டுக்கு சென்று விட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## ஆளுக்கு 3 முகக் கவசங்கள் ஆந்திர மக்களுக்கு இலவசம்

கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கிற வகையில், ஆந்திர மக்களுக்கு தலா 3 இலவச முக கவசங்கள் வழங்க முதல்வர் ஒய்.எஸ்.ஜெகன் மோகன் ரெட்டி உத்தரவிட்டார்

விஜயவாடா ததேபள்ளியிலுள்ள முகாம் அலுவலகத்தில், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நேற்றுமுன்தினம் உயர் மட்டக்குழு கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினார்.

அப்போது மாநிலத்தில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கிற வகையில், முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அங்குள்ள 5.3 கோடி மக்களுக்கும், தலா 3 முக கவசங்கள் வீதம் மொத்தம் 16 கோடி முக கவசங்கள் வழங்குமாறு அதிகாரிகளுக்கு முதல் - மந்திரி ஒய்.எஸ். ஜெகன்மோகன் ரெட்டி உத்தரவிட்டார்.

இதற்கான நடவடிக்கையை முடுக்கி விடுமாறும், கூடிய விரைவில் முக கவசங்களை மக்களுக்கு வழங்கவும் அவர் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

மண்டலங்களை புதுப்பிக்குமாறும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். அத்துடன் கொரோனா வைரஸ் தீவிரமாக பரவிவருகிற நிலையில் கொத்து கொத்தாக பரவாத வகையில் கவனமாக இருக்குமாறு அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.




# கொரோனாவை எதிர்கொள்ள 20 லட்சம் சில்லரைக் கடைகள்

மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், நாடு முழுவதும் 20 லட்சம் சில்லரை விற்பனை கடைகளை அமைக்க இந்திய அரசு திட்டமிட்டு உள்ளது.

கொரோனாவின் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு நடைமுறையில் உள்ளது. கடைகளை திறக்கவும் நேரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டு இருக்கிறது. பொருள்களை ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு கொண்டு செல்வதிலும் சிரமம் உள்ளது.

பல இடங்களில் சந்தைககளிலும், கடைகளிலும் சமூக விலகலை கடைபிடிக்காமல் மக்கள் நெருக்கமாக நிற்பதால் கொரோனா தொற்று எளிதில் பரவும் ஆபத்து உள்ளது.

இதைத்தொடர்ந்து, மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து நாடு முழுவதும் சில்லரை விற்பனை கடைகளை தொடங்க மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது. 'சுரக்ஷா ஸ்டோர்ஸ்' என்ற பெயரில் 20 லட்சம் கடைகளை இன்னும் 45 நாட்களுக்குள் தொடங்க தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

நுகர்வோர் பொருட்கள் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் ஒவ்வொரு நிறுவனத்துக்கும் ஒன்று அல்லது இரு மாநிலங்களில் இந்த திட்டத்தை நிறைவேற்றும் அனுமதி வழங்கப்படலாம் என்று தெரிகிறது.

இந்த கடைகளில் உணவுப் சாமான்கள் மட்டுமின்றி நுகர்வோர் பொருள்கள், ஆடைகளும் விற்பனை செய்யப்படும்.

இந்த சுரக்ஷா ஸ்டோர்கள் உரிய பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிமுறைகளின்படி அமைக்கப்படும். வாடிக்கையாளர்கள் கடைகளுக்குள் செல்லும் முன் கையை கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்ய ஏற்பாடு செய்யப்படும். வாடிக்கையாளர்களுக்கும் பில் போடும் கவுண்டருக்கும் ஒன்றை மீற்றர் இடைவெளி இருக்க வகை செய்யப்படும். கடை ஊழியர்களுக்கு முக கவசங்கள் அணிந்து இருப்பார்கள்.

இந்த திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக மத்திய நுகர்வோர் விவகார துறையின் செயலாளர் பவன்குமார் அகர்வால் சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனங்களுடன் ஆலோசனை நடத்தி இருக்கிறார்.



நிலாந்தன்

# ‘கொவிட் - 19’ தேர்தலுக்கான முதலீடா?

கொவிட்19 உலகை தாக்கிய பொழுது எதேச்சாதிகார பண்பு அதிகம் உடையஅரசுகள்நோய்த்தொற்றை விரைவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் என்று ஒரு பொதுவான கருத்துக் காணப்பட்டது.

சீனா எவ்வளவு விரைவாகக் கட்டுப்படுத்தியது என்று சுட்டிக்காட்டப்பட்டது. சீனா மட்டுமல்லாது வடகொரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளும் உதாரணங்களாகக் காட்டப்பட்டன.

அதேசமயம், ஐரோப்பாவின் ஜனநாயக நாடுகள் கொவிட்19ஐ எதிர்கொள்ள முடியாமல் திண்டாடின. நோர்வேயில் இருக்கும் எனது உறவினர் ஒருவர் சொன்னார் ‘இங்கே ஊரடங்குச் சட்டம் இல்லை, லொக் டவுன்தான். ஆனால் மதுக்கடைகள் திறந்து இருக்கின்றன. மது இல்லையென்றால் இங்கே இவர்களுக்கு பைத்தியம் பிடித்து விடும்’ என்று.

ஆனால், இலங்கைத் தீவில் மதுக் கடைகளைத் திறப்பதற்கு தடை மட்டுமல்லாது கசிப்பு காய்ச்சும் மறைவிடங்களும் சுற்றி வளைக்கப்படுகின்றன. பெருங்குடி மகன்கள் இப்பொழுது இரட்டைத் தண்டனையை அனுபவிக்கிறார்கள்.

ஐரோப்பிய ஜனநாயகத்தில் ஒரு சமூகத்தை ஊரடங்குச் சட்டத்தின் கீழ் வைத்திருக்க முடியாது. லொக் டவுன் என்று சொன்னாலும்கூட அதை எவ்வளவு காலத்துக்கு என்று முன்கூட்டியே அறிவித்த பின்னர்தான் நடைமுறைப்படுத்தலாம். இந்த மாதம் முழுவதும் சிங்கப்பூர் லொக் டவுனை அறிவித்தது. ஆனால் எத்தனையாம் திகதியிலிருந்து எத்தனையாம் திகதி வரை என்பதனை சிங்கப்பூர் அரசாங்கம்







தெளிவாக அறிவித்தது.

அதேசமயம், இலங்கைத் தீவில் கொவிட்19 தொற்றுக்கான வாய்ப்புடையவை என்று சந்தேகிக்கப்படும் மாவட்டங்கள் தொடர்ந்து மூடப்பட்டிருக்கின்றன. எவ்வளவு காலத்துக்கு லொக்டவுன் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. எப்பொழுது ஊரடங்கு நீக்கப்படும் என்றும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அதாவது இலங்கை தீவில் கொவிட்19ஐ எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் முழு அளவிற்கு வெளிப்படையானவை அல்ல என்றே சொல்ல வேண்டும்.

ஜனநாயகப் பண்பு குறைந்த ஒரு நாட்டில் குறிப்பாக படைத்துறையின் செல்வாக்கு அதிகம் உடைய நாடுகளில் எல்லாவற்றையும் இராணுவ இரகசியமாகப் பேணமுடியும். ஆனால் ஜனநாயகப் பண்பு அதிகமுடைய ஒரு சமூகத்தில் அவ்வாறு செய்ய முடியாது. கொவிட்19ஐ எதிர்கொள்வதில் ஐரோப்பிய சமூகங்களுக்கு இருக்கும் பெரிய சவால் அது.

எனினும் சீனா, வடகொரியா போன்ற ஜனநாயகப் பண்பு குறைந்த நாடுகள் மட்டும்தான் கொவிட்19ஐ ஒப்பீட்டளவில் விரைவாகக் கட்டுப்படுத்துகின்றன என்பதல்ல. ஜனநாயகப் பண்பு மிக்க நாடுகளான தாய்வான், தென்கொரியா போன்றனவும் அவ்வாறு கொவிட்19ஐ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளன.

அதுமட்டுமல்லாது, இலங்கை தீவுக்கு அருகே இருக்கும் இந்தியாவில் குறிப்பாக கேரள மாநிலம் வைரசை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தி இருக்கிறது. இது எப்படி சாத்தியமானது?

தாய்வானை உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீ




கரிக்கக் கூடாது என்று சீனா தடுத்து வருகிறது. எனினும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியின்றியே தாய்வான் கொவிட்19ஐ வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிறது. அதைப்போலவே தென்கொரியாவும். அருகிலிருக்கும் வடகொரியாவோடு ஒப்பிடுகையில் அந்தப் பிராந்தியத்தில் தென்கொரியா ஒரு ஜனநாயக முன்னுதாரணமாகக் காட்டப்படுகிறது.

அந்த நாடு கொவிட்19ஐ எப்படி வேகமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது?

எப்படி என்றால் அவர்கள் இரண்டு முன்னுதாரணங்களில் இருந்து பாடம் கற்றுக் கொண்டார்கள். முதலாவது 2015இல் அந்த நாட்டைத் தாக்கிய மேர்ஸ் என்று அழைக்கப்படும் ஒரு வைரஸிடமிருந்து கிடைத்த அனுபவம். இரண்டாவது சீனாவிடமிருந்து கிடைத்த அனுபவம்.

மேர்ஸ் வைரஸ் தென்கொரியா தாக்கியபோது முதலில் அந்த நாடு தயாராக இருக்கவில்லை. அதற்குரிய விலையையும் கொடுத்தது. எனினும் விரைவில் சுதாகரித்துக் கொண்டது. அந்த வைரஸைக் கட்டுப்படுத்திய அனுபவத்தை வைத்து அந்த நாடு



கொவிட்19ஐ எதிர்கொண்டது.

மேலும் கொவிட்19ஐ எதிர்கொள்வதில் சீனாவுக்கு ஏற்பட்ட சவால்களை தென்கொரியா கற்றுக் கொண்டது. இந்த இரண்டு அனுபவங்களின் தொகுப்பாக தென்கொரியா கொவிட்19இன் பரவலைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதே காலப்பகுதியில் தொற்றுக்கு உள்ளானவர்களைச் சோதிப்பதற்கு வேண்டிய உபகரணங்களை அதிகரித்த அளவில் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

அதுபோலவே, முக உறைகளையும் வென்ரிலேற்றர்களையும் அதிகரித்த அளவில் உற்பத்தி செய்தது. குறுகிய நேரத்தில் அதிகளவு நபர்களை சோதிக்கத் தேவையான அளவுக்கு சோதனைக் கருவிகளை அந்த நாடு அதிகரித்த அளவில் உற்பத்தி செய்தது. அதன் விளைவாக மிகக் குறுகிய காலத்தில் அதிக தொகையினரை அங்கே சோதிக்கக் கூடியதாக இருந்தது.

அதுமட்டுமல்ல, சீன முன்னுதாரணத்தை முன்வைத்து ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நோயாளிகளைக் கண்டுபிடிக்கும் உத்திகளையும் தென்கொரியா பயன்படுத்தியது. சீனாவின் மேற்படி பொறிமுறை தனிமனித சுதந்திரத்திற்கு எதிரானது என்ற குற்றச்சாட்டு உண்டு. தென்கொரியாவிலும் குற்றச்சாட்டுக்கள் உண்டு. அதேபோன்ற உத்திகளை அமெரிக்காவில் பயன்படுத்த முடியவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இப்படித்தான் தென்கொரியா நோய் பரவும் வேகத்தைக் கட்டுப்படுத்தியது.

இந்தியாவில் கேரள மாநிலமும் தனது முன் அனு பவத்தின் அடிப்படையிலேயே முடிவுகளை எடுத்தது. அங்கேயும் 2018ஆம் ஆண்டு நிபா (Nipah) வைரஸ் தாக்கியது. கேரளாவிலிருந்து மத்திய கிழக்குக்கு வேலைக்குச் செல்பவர்கள் மூலம் அந்த வைரஸ் பரவியது. அந்த அனுபவத்தை அடிப்படையாக வைத்து கேரளா மாநிலம் கொவிட்19ஐ எதிர்கொண்டது.

தென்கொரியா, கேரளா ஆகிய இரண்டு உதாரணங்களையும் எடுத்துக்கொண்டால் அங்கெல்லாம் மேர்ஸ் வைரஸ், நிபா வைரஸ் ஆகிய இரண்டு வைரஸ்களின் தாக்கத்திலிருந்து பெற்ற முன் அனுபவம் இருந்தது. எல்லாவற்றையும் விட முக்கியமாக அங்கிருந்த அரசுகள் தமது மக்களை நேசித்தன. அது காரணமாகத்தான் முன் அனுபவங்களின் அடிப்படையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதப்படுத்தின.

சிங்கப்பூரிலும் ரஷ்யாவிலும் சீனாவைப் போலவே சந்தேகத்துக்குரிய நோய்த் தொற்றாளர்களை பின்தொடரும் உத்திகள் அதிகம் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டன. சிங்கப்பூரில் கிட்டத்தட்ட 83 ஆயிரம் கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தப்பட்டன. ரஷ்யாவில் ஒவ்வொரு தனி நபருடைய முகத்தையும் ஸ்க்ரீன் செய்து அதன்மூலம் நோய்த் தொற்றைப் பின்தொடரும் உத்திகளை அந்த நாட்டின் அரசாங்கம் மேற்கொண்டதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆனால், ஜனநாயகவழிமுறைகளின் ஊடாக தன்னை ஒரு மன்னனாக கட்டமைத்து வரும் ரஷ்யத் தலைவர் புடின் தனக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யக்கூடிய மக்களை கண்காணிப்பதற்காக ஏற்கனவே உருவாக்கிய இலத்திரனியல் வலையமைப்பைத்தான் கொவிட்19இற்கு எதிராகவும் பயன்படுத்தினர் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

> “கொவிட்19 உலகை தாக்கிய பொழுது எதேச்சாதிகார பண்பு அதிகம் உடைய அரசுகள் நோய்த்தொற்றை விரைவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் என்று ஒரு பொதுவான கருத்துக் காணப்பட்டது.
> சீனா எவ்வளவு விரைவாகக் கட்டுப்படுத்தியது என்று சுட்டிக்காட்டப்பட்டது. சீனா மட்டுமல்லாது வடகொரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளும் உதாரணங்களாகக் காட்டப்பட்டன.”

# ‘கொவிட் - 19’ தேர்தலுக்கான ....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதுவாயினும், சிங்கப்பூர், ரஷ்யா, சீனா ஆகிய முன்னுதாரணங்களின்படி அங்கெல்லாம் ஜி.பி.எஸ். தொழில்நுட்பமும் ஏனைய பின்தொடரும் தொழில்நுட்பங்களும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு நோய்த்தொற்று ஒப்பீட்டளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

ஆனால் அதுபோன்ற வழிமுறைகளை ஐரோப்பிய ஜனநாயகத்துக்குள் அதிகரித்த அளவில் பயன்படுத்த முடியாது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

எனினும் தாய்வான், தென்கொரியா, கேரள மாநிலம் போன்ற முன்னுதாரணங்களை முன்வைத்து ஜனநாயக பரப்பிற்குள்ளும் ஆட்சியாளர்கள் கொவிட்19ஐ வெற்றிகரமாகக் கையாள முடியும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அதிகம் ஜனநாயகத் தன்மை மிக்க ஆட்சிப் பரப்புக்குள் கொவிட்19 போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவது அதிகம் சவால்களுக்குரியதே. ஜனநாயகப் பண்பு குறைந்த அரசாங்கங்கள் ஒப்பீட்டளவில் அதை இலகுவாகச் செய்ய முடியும். ஆனால் நோபல் பரிசை வென்ற பொருளியலாளர் அமர்தியா சென் கூறுவதுபோல அது ஒரு படைநடவடிக்கை மட்டும் அல்லாது அதில் மக்களுடைய பங்களிப்பும் இருக்க வேண்டும்.

இந்த முன்னுதாரணங்களின் பின்னணியில் இலங்கை தீவின் நிலைவரத்தை எடுத்துக்கொண்டால் இச்சிறிய தீவு, சீனாவைப் போலவே விரைவாக நோயைக் கட்டுப்படுத்தும் என்று கூறப்படுகிறது. அது சாத்தியமே. ஏனெனில் இது ஒரு தீவு. தவிர இங்கு ஆட்சியில் இருப்பது படைத்தரப்புடன் நெருக்கமான உறவைக் கொண்டிருக்கும் ராஜபக்ஷக்கள். எனவே ஒரு படை நடவடிக்கை போல அவர்கள் நோயை எதிர்கொள்கிறார்கள்.

இதனால், இலங்கை தீவு சீனாவைப் போலவே விரைவாக நோயைக் கட்டுக்குள் கொண்டு வந்ததற்காக பாராட்டுகளைப் பெற்றிருக்கிறது. ஆனால் ராஜபக்கள் கொவிட்19ஐயும் தமது தேர்தல் வெற்றிக்கான முதலீடாகவே பயன்படுத்துகிறார்களா?

வைரஸின் தாக்கம் குறைகிறதோ இல்லையோ தேர்தலை விரைவாக நடத்தி முடித்து விட அவர்கள் அவசரப்படுவது தெரிகிறது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உடைவையே அவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த நினைக்கிறார்கள். தேர்தல் வெற்றியை நோக்கியே அவர்களுடைய எல்லா நடவடிக்கைகளும் அமைந்திருக்கின்றன என்று கருதத்தக்க விதத்தில் தான் கொவிட்19இற்கு எதிரான அவருடைய பெரும்பாலான நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

கொவிட்19இற்கு எதிரான நடவடிக்கைகளின் போது அரசாங்கம் மக்களுக்கு உதவி புரிவதாகக் கூறிக்கொண்டு அறிவித்த பல சலுகைகளும் தேர்தல் உள்நோக்கத்தைக் கொண்டவை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

உதாரணமாக, அரசாங்கம் பொருள்களுக்கு விலைகளைக் குறைப்பதன் மூலம் அப்பொருள்களை வியாபாரிகள் பதுக்குமாறு செய்துவிட்டது. ஏற்கனவே மீன்ரின், பருப்பு, முட்டை போன்ற பொருள்களின் விலையை அரசாங்கம் குறைத்தது. ஆனால் அரசாங்கம் அறிவித்த விலைக்கு பொருள்கள் கிடைப்பதில்லை. ஏனெனில் அதற்கு வேண்டிய மானியம் வியாபாரிகளுக்கு வழங்கப்படவில்லை.

பல லட்சம் முட்டைகள் தேங்கிக் கிடக்கின்றன. மனிதர்கள் தமது நோய் எதிர்ப்பு சக்தியை உயர்வாக வைத்துக் கொண்டிருக்க வேண்டிய ஒரு காலகட்டத்தில் மில்லியன் கணக்கான முட்டைகள் அழுகும் ஒரு நிலைமை தோன்றியிருக்கிறது.

இப்பொழுது, அரசாங்கம் அரிசிக்கும் விலை அறிவித்திருக்கிறது. இது கடைசியில் கஞ்சிக்கும் வழியில்லாமல் செய்யும் ஒரு வேலைதான் என்று சாதாரண சனங்கள் பயப்படுகிறார்கள். விலைக் குறைப்புச் செய்த அரசாங்கம் அதற்கு வேண்டிய மானியங்களை வழங்கவில்லை. ஊரடங்கை அறிவித்த அரசாங்கம் அதனால் பாதிக்கப்படும் அன்றாட உழைப்பாளர்களுக்கு நிவாரணத்தை வழங்கவில்லை. அதற்கு வேண்டிய பொறிமுறையும் இல்லை. இது எதைக் காட்டுகிறது?

எந்தவித முன்னாயத்தமும் இன்றி அரசாங்கம் கொவிட்19 இற்கு எதிரான ஒரு போரை முன்னெடுக்கிறது. இது அரசாங்கம் நோயைக் கட்டுப்படுத்துவதை விடவும் தேர்தலை அவசரமாக நடத்தி முடிப்பதில்தான் குறியாக இருக்கிறது என்பதை காட்டுகின்றதா?

நன்றி: ‘ஆதவன்’ இணையம்

## 81 மலேசியர்கள் இன்றைய தினம் நாடு திரும்புவர்



அசாதாரண நிலைமை ஏற்பட்டமையை அடுத்து இலங்கையில் சிக்கிக் கொண்டிருந்த 81 மலேசிய நாட்டவர்கள் இன்று தங்கள் நாட்டுக்குப் புறப்பட்டுச் செல்லவிருக்கின்றனர்.

அவர்களுக்காக விசேடமாக மலிண்டோ விமான சேவை நிறுவனத்தின் விமானம் ஒன்று இன்று கொழும்பு வருகின்றது.

இந்தப் பயணிகளைத் திருப்பி அனுப்புவதற்கான ஒழுங்குகள் தொடர்பாக மலேசிய வெளியுறவு அமைச்சர் நேற்று இலங்கை வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவைத் தொடர்பு கொண்டு பேசியிருந்தார்.

## லண்டனிலிருந்து 2 பேர் திரும்பினர்

இலங்கைக்கு வருகைதர முடியாமல் லண்டன் விமான நிலையத்தில் தங்கியிருந்த, இலங்கை பிரஜைகள் இருவர் நேற்றுப் பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இருவரும் பின்னர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## கைதான மூவர் தியத்தலாவை முகாமுக்கு!

பெரகல நகரில் ஊரடங்கு உத்தரவை மீறி லொறியொன்றில் பயணித்த இரு வரும் ஹப்புத்தளை பிரதேசத்தில் சுய தனிமைப் படுத்தலை மீறிய நபரொரு வரும் நேற்று இரவு கைதுசெய்யப்பட்டு, தியத்தலாவை தனிமைப்படுத்தல் முகா முக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மூவ ரும் பதுளை, ஹாலிஎல பிரதேசங்க ளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.









# குடும்ப அங்கத்தவர்களுடன் மட்டும் புத்தாண்டைக் கொண்டாடுவோம்!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துச் செய்தி

இம்முறை புத்தாண்டினை எளிமையாகவும், ஆடம்பரமின்றியும் உங்களது குடும்ப அங்கத்தவர்களுடன் மாத்திரம் கொண்டாடுமாறு உங்கள் அனைவரிடமும் மிகவும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

நாட்டு மக்களுக்குத் தாம் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலேயே ச்வர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அச்செய்தியிலே மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

மிகவும் முக்கியமானதொரு அபாயத்தினை எதிர்நோக்கிய நிலையில் இம்முறை புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே நீங்கள் இந்தப் புத்தாண்டினை சுகாதார ரீதியான எச்சரிக்கைகள் மற்றும் சிபார்சுகளுக்கு உட்பட்ட வகையிலேயே கழிக்க வேண்டியுள்ளது.

தேசத்தின் இருப்புக்காக பொதுமக்களின் சுகாதார நலனுக்கு ஏற்புடையவாறு விதிக்கப்பட்ட சட்டதிட்டங்கள் மற்றும் தடைகள் புத்தாண்டு நாள்களிலும் அமுல்படுத்தப்படுகின்றன என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த சுகாதார ரீதியான தடைகள் மற்றும் சிபார்சுகளின் மத்தியிலும் புத்தாண்டின் அர்த்தம் அழிந்துவிடாது பேணிக்கொள்ள முடியும் என நம்புகிறேன்.

சிங்கள, தமிழ் புத்தாண்டு இனங்களுக்கு மத்தியில் ஒற்றுமை மற்றும் சகவாழ்வினை எடுத்தியம்புகிறது. ஒரே சந்தர்ப்பத்தில் வேலை செய்யும் எமக்கு தேசத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்த முடியும். வீட்டினுள் மாத்திரம் இருந்து இந்த சம்பிரதாயச் சடங்குகளை நிறைவேற்றி எமது மரபுகளை முன்னெடுத்துச் செல்ல முடியும். அது மிகவும் எளிமையாக, ஆடம்பரமின்றி புத்தாண்டின் மகிழ்ச்சியை அடைந்து கொள்வதாக அமையும். இந்த எளிமை, ஆடம்பரமின்மை தேசத்தின் இருப்புக்கு காரணமாக அமைந்துள்ளது என்பதை வரலாற்றை ஆராயும் போது தெளிவாகிறது.

பல நூறு ஆண்டுகளாக தொடர்ச்சியாக கடைபிடித்து வந்த பழக்கவழக்கங்கள் மூலம் வெளிப்பட்ட தேசிய உணர்வுகளின் பெறுமானத்தை இன்று முன்னெப்போதுமில்லாதவாறு உணர்கிறோம். சம்பிரதாய ரீதியாக நாட்டினர் மத்தியில் காணப்பட்ட அந்த பிணைப்பு, ஒற்றுமை, மக்கள் கலாசாரத்தின் பலம் காரணமாகவே முழு உலகினையும் திகைப்படையச் செய்த ஆதரவற்றதாக மாற்றிய தொற்றுநோய்க்கு நாம் சிறப்பாக முகங்கொடுக்கிறோம்.



எனவே இம்முறை புத்தாண்டினை எளிமையாகவும், ஆடம்பரமின்றியும் உங்களது குடும்ப அங்கத்தவர்களுடன் மாத்திரம் கொண்டாடுமாறு உங்கள் அனைவரிடமும் மிகவும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.



# உயிர்க்கொல்லி நோயில் இருந்தும் விடுதலை பெற்று எழுந்து நிற்போம்!

## புத்தாண்டுச் செய்தியில் மாவை வாழ்த்து

உயிர்க்கொல்லி நோயிலிருந்தும் விடுதலை பெற்று எழுந்து நிற்போம் எனத் தமது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

சார்வரி புத்தாண்டு பிறக்கிறது. அனைவருக்கும் இதயபூர்வமான புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

அடிமைத் தளையிலிருந்து விடுதலைக்காக அர்ப்பணித்த எம் தமிழ்பேசும் மக்கள் 'கோவிட் -19' உயிர்க்கொல்லி நோயிலிருந்தும் விடுதலை பெற்று வெற்றி ஆண்டாக புத்தாண்டிலிருந்து அர்ப்பணித்து வெற்றி பெறுங்கள். எழுந்து நில்லுங்கள்.



அறுகு, துளசி, வேம்பிலையுடன் மஞ்சள் கலந்து நன்றே நீராடுங்கள்.

நம்பிக்கையுள்ள தெய்வங்களை வழிபட்டு இறை பணி செய்யுங்கள். - என்று உள்ளது.

# வருந்துயரை எதிர்கொண்டு வரலாற்றின் மாற்றத்தை உருவாக்கும் வல்லமையை உயிர்ப்போடு பெறுவோம்

## புதுவருடச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

வருந்துயரை எதிர்கொண்டு வரலாற்றின் மாற்றத்தை உருவாக்கும் வல்லமையை பெறுவோம் எனப் புதுவருடப்பிறப்பு தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை ஒட்டி மக்களுக்குத் தாம் விடுத்த செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு :-

எதுவரினும் முகங்கொள்வோம் என்ற மனவுறுதியும், பழையன கழித்தல் புதியன புகுதல் என்ற வாழ்வின் நம்பிக்கையுமே மனிதகுலத்தின உயர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் வித்திடுகின்றன.

அந்த வகையில் நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம் என்ற மனிதகுலத்தின் சமகால விருப்பங்களையே எமது மக்களும் தமது ஆழ்மன விருப்பங்களாக கொண்டுள்ளனர்.

இயற்கையின் அனர்த்தங்களும், பெருநோய்கள் தந்த பேரிடர்களும் போரின் அவலங்களும் கடந்தகாலங்களில் எமது மக்களைச் சூழ்ந்து நின்ற போதும், அவற்றில் இருந்து மீள் எழுச்சி கொண்ட வரலாற்றை கொண்டவர்கள் எமது மக்கள்.

இன்று பிறந்து வரும் சித்திரை புத்தாண்டின் மகிழ்வை எமது மக்கள் கொண்டாடி மகிழ்வதற்கு பெருங்கொடு நோயொன்று பலத்த சவாலாக இருந்து



வரினும், இதையும் கடந்து, சூழ்ந்து வரும் தடைகளையும் துயர்களையும் உடைத்து, அழகார்ந்த வாழ்வில் நீடித்த நிம்மதியை எதிர்கால பொழுதுகள் ஒவ்வொன்றும் தரும் என்ற மன வல்லமையோடு நாம் சமகாலத்தை வென்று எதிர்காலத்தை வரவேற்போம். சமகால பேரிடர் எமை விட்டு அகலும் என்பதில் மாற்றமில்லை. அது குறித்த அச்சம் எமக்கு தேவையில்லை. ஆனாலும் நாம் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

சுத்தமும் சுகாதாரமும் எம்மை நாமே பாதுகாக்கும் வழிமுறைகளும் எமக்கு அவசியம். எமது மக்களை அச்சுறுத்தும் இன்றைய சூழல் எமை விட்டு அகன்று போனாலும் அதன் பொருளாதர தாக்கங்கள் சில காலம் எம்முடன் தொடர்ந்து வரும் என்பதை நாம் உணர வேண்டும்.

ஆகவே அதை எதிர் கொள்ள நாம் இன்றே எழுந்திருப்போம். இன்றில் இருந்தே உள்ளூர் உற்பத்தியில் நாம் இறங்க வேண்டும்.

கடல் வளங்களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். அவற்றைச் சந்தைப்படுத்த வேண்டும். நன்னீர் வளர்ப்பு திட்டங்களில் ஈடுபட வேண்டும். எமது விளை நிலங்களில் பயிர் செய்யவும், வீட்டுத்தோட்டங்களை அமைக்கவும்,தரிசு நிலங்களில் விதை விதைக்கவும், விவசாய துறையை ஊக்குவிக்கவும் நாம் தயாராக வேண்டும்.

பனை வள தொழில் உட்பட சகல தொழிற்றுறைகளிலும் உள்ள தடைகளை இனம் கண்டு நாம் முன்னேறி செல்ல வேண்டும். சிறு கைத்தொழில் முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும். இதன் மூலம் நாம் பஞ்சம், பசி, பட்டினிகளில் இருந்தும் மீண்டெழ வேண்டும்.

எவரும் எவரிடமும் கையேந்தி நிற்காமல் தமது சொந்த கால்களிலேயே எமது மக்கள் நிற்கும் நிலைமையை உருவாக்குவோம். வாழ்வின் மீதான நம்பிக்கை கொள்வோம், வருந்துயரை எதிர்கொண்டு வரலாற்றின் மாற்றத்தை உருவாக்கும் வல்லமையை பெறுவோம் - என தெரிவித்துள்ளார்.

# அனைவருமே அமைதியுடன் இருந்திடவே நினைப்போம்!

சித்திரையைக் கொண்டாடச் சிறகடிக்கும் மனது
சிரிப்புடனே உலாபோக எழுந்துவரு முணர்வு
அத்தனையும் இப்போ அடங்கிவிடும் நிலைமை
ஆரிடத்து நோவோம் ஆர்க்கெடுத்து உரைப்போம் !

புத்துடப்பு வாங்க வோவென்னும் மனது
போனாலே துன்பம் வருமென்னும் உணர்வு
எத்தனையே உயிர்பிரியும் இக்கால நிலைமை
எப்போது மாறுமென யாருரைப்பார் எமக்கு !

பட்டாசு வாங்குதற்கு விரும்புகின்ற பிள்ளை
பட்சணங்கள் செய்வதற்கு விரும்புகின்ற பாட்டி
கஷ்டநிலை தெரியாமல் கதையுரைக்கும் தாத்தா
அத்தனை மனதேற்றி ஆரிடத்து உரைப்போம் !

நாட்டுநிலை தெரியாமல் நடைபயிலும் மாமா
நடுவீட்டினிலே தலைவிரிக்கும் நம்முடைய மாமி
சீட்டுக்கட்டி ஓலமிடும் சித்தப்பா சித்தி
காட்டுகின்ற காட்சியினை யார்வருவார் காண !

அப்பாவாய் அம்மாவாய் அகமிருக்கும் நாங்கள்
ஆசைபல இருந்தாலும் அடக்குகிறோம் இப்போ
குடும்பத்துக் குதூகலத்தைக் குறைக்க மனமில்லை
குவலயத்து நிலையெம்மை குழப்பிருக்கு இப்போ !

திண்டாட்ட தருமணதில் கொண்டாட்டம் எதற்கு
வண்டாகத் திரிந்தவர்கள் வாடுகிறார் சிறையில்
அண்டிநிற்கும் இருளனைத்தும் அகன்றுவிடும் வரைக்கும்
அனைவருமே அமைதியுடன் இருந்திடவே நினைப்போம் !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா - மெல்பேண் - அவுஸ்திரேலியா

# புலம் பெயர் உறவுகளின் நல்வாழ்வுக்காக இந்நாளில் நன்றியோடு பிரார்த்தியுங்கள்!

புத்தாண்டுச் செய்தியில் செஞ்சொற்செல்வர் கோரிக்கை



எங்களுடைய புலம் பெயர் உறவுகளின் நல்வாழ்வுக்காக அனைவரும் இந்நாளில் நன்றியோடு பிரார்த்தியுங்கள்.

இவ்வாறு அழைப்புவிடுத்திருக்கின்றார் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன்.

தமது புத்தாண்டுச் செய்தியிலேயே அவர் இவ்வாறு கோரியிருக்கின்றார். அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

அன்பர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான புத்தாண்டு வாழ்த்துகள் உரித்தாகுக.

எங்கள் உள்ளத்தைப் பண்படுத்தும் இத் திருநாளில் எம்மைப் படைத்த இறையருளுக்கு நன்றி கூறுங்கள். உலகம் முழுவதும் கொரோனா என்னும் அபாய நோயின்அச்சத்தில் இருக்கும் சூழலில் நாம் அமைதியாக எங்கள் இல்லங்களில் இருந்து அனைவருக்காகவும் இந்நாளில் பிரார்த்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். வருடப் பிறப்பு நாளில் ஆலயம் செல்ல வேண்டும் என்று கருதி, சமூக நன்மைக்காக உருவாக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை மீறாதீர்கள். மருத்துவ சமூகத்தின் வார்த்தைக்கு மதிப்பளித்து ,நோய் பரவாது சமூகத்தைக் காக்கும் தர்மத்தை நாம் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். இத்தர்மத்தை அனைவரும் கடைப்பிடிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

இரவு, பகலாக உயிர்களைக் காக்கும் மருத்துவ சமூகத்துக்கும் ஏனைய பணிகளில் அயராது தொண்டு செய்துவரும் பண்புடையார்க்கும் நன்றி தெரிவித்து அவர்களுக்காகவும் இந்நாளில் பிரார்த்தியுங்கள்.

எங்களுடைய உறவுகள் புலம் பெயர்ந்துவெளிநாடுகளில்வாழ்கிறார்கள். அவர்கள் இன்று ஆபத்தான சூழ்நிலையில் மிகக் கவலையோடு இருப்பதை அனைவரும் அறிவோம். அவர்களின் பேருதவிகளால்எம்மண்ணில்எத்தனை பேர் ஆறுதல் பெற்றார்கள்! அவர்களின் வாழ்வுக்காக அனைவரும் இந்நாளில் நன்றியோடு பிரார்த்தியுங்கள்.

புது வருட நாளில் ஆடம்பரம், ஆரவாரம் அத்தனையையும் தவிர்த்து மனிதாபிமான ரீதியில் அமைதியாக உங்கள் இல்லங்களில் பிரார்த்தனை செய்யுங்கள். சென்ற ஆண்டில் எமக்கு இறைவன் தந்த நல்வாய்ப்புக்களுக்கு நன்றி சொல்வதோடு நாம்விட்ட தவறுகளையும் நினைந்து மன்னிப்பு வேண்டிப் பிரார்த்தியுங்கள். புத்தாண்டில் புதிய சிந்தனைகோடு நல்லமனிதர்களாக நாம் வாழத் திடசங்கற்பம் கொள்வோம். - என்று உள்ளது.

# வீட்டில் இருந்தவாறே குடும்ப உறவுகளுடன் இறைவனின் பிரார்த்தனையுடன் புத்தாண்டு

## சைவ ஆதீனங்கள் வேண்டுகோள்







மலரும் புத்தாண்டை வீட்டிலிருந்தவாறே, குடும்ப உறவுகளுடன் இறை பிரார்த்தனை செய்து இல்லாதவர்களுக்கு உதவும் கைங்கரியத்துடன் கடைப்பிடியுங்கள் என சைவ ஆதீனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

புத்தாண்டை முன்னிட்டு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சரிய சுவாமிகள், தென் கயிலை ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளார், மெய்கண்டார் ஆதீன முதல்வர் உமாபதி சிவம் அடிகளார் ஆகியோர் விடுத்துள்ள செய்தியிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

இன்று உலகின் மிகவும் நெருக்கடியான துன்பகரமான நோயின் தாக்கத்தின் விளைவுகளுடன் புதிய தமிழ் - சிங்கள புத்தாண்டு மலர்கின்றது.

இந்த முக்கியமான தருணத்தில் எம்மிடையே உள்ள சகல வேற்றுமைகளையும் மறந்து சகோதரத்துவத்துடன் இக்கொடிய கொரோனா நோயிலிலிருந்து விடுபட எம்மால் இயன்ற சகல சுகாதார வழிமுறைகளையும் மானசீகமாக கடைப்பிடிக்க உறுதி எடுப்போம்.

எம் அயலில் யாராவது பசித்திருந்தால் அவர்களுக்கு இயன்றவரை உதவுவோம். சமூகத்தின் நலிவுற்ற பிரிவினராகிய முதியோர், கர்ப்பிணிகள், குழந்தைகள் நோயாளிகளின் நலனில் அதிக கவனம் எடுப்போம்.

உள்ளம் பெரும் கோயில் எனும் தத்துவத்தை உணர்ந்து ஆலய புற வழிபாடுகளை இக்கொடிய தொற்றுக் காலத்தில் தவிர்த்து உள்ளன்போடு எம் இல்லங்களிலிருந்து தாய் தந்தையினரின் ஆசீர்வாதத்தோடு எமது வழிபாடுகளை எளிமையான சமய சம்பிரதாயங்களுடன் கடைப் பிடிப்போம்.

மருத்து நீர் போன்றவற்றை எமக்கு வீட்டில் கிடைக்கும் மூலிகை இலைகள் கொண்டே தயாரிப்போம். இந்த காலத்தில் புத்தாடை புனைதல் உட்பட அனைத்து ஆடம்பரங்களையும் தவிர்ப்போம்.

பல ஆலயங்களும் அமைப்புக்களும் தன்னார் வலர்களும் ஆற்றி வரும் நிவாரணப் பணிகள் மனத்திற்கு நிறைவை தருகின்றன. அவை மலரும் புத்தாண்டிலும் இன்னும் வீச்சுடன் இக்கொடிய நோய் விளைவுகள் முடியும் வரை தொடரப்பட வேண்டும் எனவும் அதற்கு அனைத்து சைவ சமயிகளும் பங்களிக்க வேண்டும் எனவும் வேண்டு கின்றோம்.

அன்பே உருவான சிவப் பரம் பொருள் இக்கொடிய துயரத்திலிருந்து எம்மை விடுவித்து எம் எல்லோர் மனங்களிலும் அன்பும் அறமும் ஓங்க செய்ய வேண்டும் என இம் மலரும் புத்தாண்டில் இலங்கையின் சைவ ஆதீனங்களின் குருமுதல்வர்களாகிய நாம் கூட்டாக உருக்கமான பிரார்த்தனையுடன் வேண்டு கின்றோம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீட்டில் இருந்து பிரார்த்திக்கும் நாளாக சித்திரைப் புதுவருடம் அமையட்டும்!

## முன்னாள் மட்டு. எம்.பியான அரியநேத்திரன் செய்தி



இந்தச் சித்திரைப் புதுவருட நாளை வீட்டில் இருந்து பிரார்த்தனை செய்யும் நாளாக மாற்றி, நாட்டிலும் பிற உலக நாடுகளிலும் கொரோனா வைரஸ் நோய் இல்லாமல் மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமென இறை வழிபாடுகளைச் செய்வோம். - இப்படி மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் பட்டிருந்த தொகுதித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

சர்வாரி சித்திரைப் புதுவருடத்தை ஒட்டித் தாம் விடுத்த வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஈழுத்தமிழர்களுக்கு இன்னல்கள் புதியவை அல்ல.

இயற்கை அவலங்களான சூறாவளி, சுனாமி, வெள்ளப்பெருக்கு எனவும் -

செயற்கை அனர்த்தங்களாக இராணுவ கெடுபிடிகள், போராட்டங்கள். இடம்பெயர்வுகள், அகதிமுகாம் வாழ்க்கை எனவும் -

எண்ணற்ற உயிர் ஆபத்துக்களையும், போர் அழிவுகளையும், இனப்படுகொலைகளையும் சந்தித்த எமது மக்களுக்குத் தற்போது கொரோனா வைரஸ் நோய் தாக்கம், ஊரடங்கு சட்டம், சமூக இடைவெளி பேணல் என்ற புதிய இடர்களுக்கு முகம்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த சூழலில் தற்போது 2020, சித்திரைப் புதுவருடம் எதிர்வரும் நேற்றிரவு பிறந்தது, வெளியில் செல்ல முடியாமல் வீட்டில் முடங்கி இருக்கும் நிலை உருவாகியுள்ளது.

தமிழ் சித்திரைப் பிறப்பு வந்தால் புத்தாடை அணிதல், தமிழ் கலாசார விளையாட்டு விழாக்களை நடத்துதல், ஊஞ்சல் கட்டி ஆடுதல், கோலம் போடுதல், குடும்பத்துடன் சென்று ஆலய வழிபாடு செய்தல், உறவினர் வீடுகளுக்குச் சென்று விருந்துண்ணுதல் என எமது பாரம்பரிய கலாசார மரபுகளை இந்தச் சித்திரை புதுவருடத்தில் நாம் மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சோகமான நாளில் பல்லாயிரம் மக்கள் கொரோனா நோயினால் உயிர் இழந்தும், இலட்சக்கணக்கான மக்கள் நோய் தாக்கம் ஏற்பட்டும் உலகம் சோகத்தில் மூழ்கியுள்ளது. வல்லரசு நாடுகளும் விஞ்ஞான மேதைகளும் நோய்க்கு மருந்து கண்டு பிடிக்கமுடியாமல் திக்கு முக்காடுகின்றமையைக் காணமுடிகிறது.

நமது நாட்டிலும் இதுவரை ஏழு உயிரிழப்புகள் இடம்பெற்றும், ஆயிரக்கணக்கான மக்கள் தனிமைப்படுத்தப்பட்டும் 200 பேர் நோய் சிகிச்சை பெற்றும் வருகின்றனர்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது எமது நாட்டின் வைத்திய நிபுணர்கள், சுகாதார ஊழியர்கள், தாதிகள், படையினர், அரச திணைக்கள அலுவலர்கள் எனப் பலதரப்பட்டவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய செயல்பாடுகளாலும் இறைவன் துணையாலும் எமது நாட்டில் பாரிய உயிர்சேதங்கள் ஏற்படாமல் நாட. காப்பாற்றப் பட்டுள்ளது,

இந்த நெருக்கடியான இவ்வேளையில் இவ்வருட சித்திரை புத்தாண்டு தினம் மலர்ந்துள்ளது.

வடக்கு கிழக்கு மக்களை பொறுத்தவரைக் கடந்த காலங்களில் அகதி முகாம்களிலும், முள்ளுவேலிக்களுக்குள்ளும், எறிகணைக் குண்டுத் தாக்குதல் அச்சத்துக்குள்ளும் சித்திரை, தைபொங்கல், தீபாவளி எனப் பல பண்டிகைகளை நாம் கொண்டாட முடியாமல் தவித்த வரலாறு அவர்களுக்கு உண்டு.

அதே போன்ற ஒரு சூழ்நிலை எமது நாட்டையும் தாண்டி இன்று 200க்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வேளையில் நாம் பொறுப்புடன் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடித்து, எல்லோரும் சமூகஇடைவெளியைப் பேணி, வீட்டில் இருந்து சித்திரைப் புத்தாண்டு நாளில் பிரார்த்தனை மேற்கொள்வோம். - என மேலும் தெரிவித்தார்.

# சித்திரைபுதுவருடம் சிறப்பாக மலரவில்லை!

உலகம் முழுவதும் கொரோனா அவலம்!
ஒவ்வொரு நாளும் மரணம் பட்டியல்!
இலங்கை நாட்டிலும் இதனின் தாக்கம்!
எப்படி சித்திரையாள் இங்கே வருவாள்!

ஊரடங்கு சட்டத்தால் ஊரெல்லாம் அமைதி!
ஊர் கோயில்களிலும் மருத்துநீர் இல்லை!
உடைகள் வாங்கவும் கடைகள் யாவும் பூட்டு!
உணவுசமைக்கவும் பொருட்கள் தட்டுப்பாடு!

ஊஞ்சல் ஆட்டம் விளையாட்டு விழாக்கல்!
கைவிசேடம் காலில் விழுந்து ஆசி பெறல்!
எண்ணெய்ப்பலகாரம் விருந்தோபல் எல்லாம்!
இல்லாமல் போனது இவ்வருட நாளினிலே!

கொண்டாட்டம் இல்லை குதூகலம் இல்லை!
பொண்டாட்டி புரிசன் பிள்ளைகள் குடும்பமும்!
அண்டைவீடு அயலூர் செல்லவும் தொல்லை!
பண்டைத்தமிழ் பண்பாடும் பரிதாப நிலை!

எப்போது மாறும் இறைவனுக்கே வெளிச்சம்!
எத்திசையும் செல்வதற்கும் இயலாத காலம்!
என்றாலும் எல்லோர்க்கும்இப்போது உணரும்!
வீட்டோடு இருப்பதுதான் வியாதியை தீர்க்கும்!

சார்வதி வருடம் இது சந்ததிகள் கூடவில்லை!
சர்வதேச நாடுகளும் சங்கடம் தீர்க்கவில்லை!
கொரோனா நோய் தாக்கம் நிம்மதியுமில்லை!
சித்திரை புதுவருடம் சிறப்பாக மலரவில்லை!

அம்பிளாந்துறையூர் அரியம்

# இறைவழிபாடு ஒன்றே எமக்கு வழிகாட்டும்

## இந்து சமயப் பேரவையின் தலைவர் செய்தி



இறைவழிபாடே எமக்கு வழிகாட்டும் என்று தமது புத்தாண்டுச் செய்தியில் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தெரிவித்திருக்கின்றார்.

அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

மலரும் சார்வரி வரும், 'கொவிட் - 19' இல் இருந்து விடிவு பெற்ற ஆண்டாக திகழ வேண்டுமென்று எல்லாம் வல்ல ஆடல்வல்லான் திருப்பாதங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

உலகை உலுக்கும் 'கொவிட் - 19' கடந்த ஆண்டோடு முடிவுறவேண்டுமென்பதே அனைவரின் பிரார்த்தனையாகிறது. இந்த இக்கட்டான சூழலில் பல்லாயிரக்கணக்கானோரை உலகம் இழந்துவிட்டது, பல லட்சம் மக்கள் இக்கொடிய நோயினால் அவதியுறுகிறார்கள். முழுவுலகையே வீடுகளுக்குள்ளே முடக்கிவிட்டது இந்நோய். கோடிக்கணக்கான மக்கள் வாழவழியின்றி ஒரு நேர உணவுக்குத் தவிக்கின்றார்கள். நோயாளரை, உறவினர் பராமரிக்க முடியாதநிலை. இறந்தவரைச் சுற்றத்தார் தகனம் செய்யமுடியாது. இப்படி ஓர் சூழலை நாம் என்றும் கண்டதில்லை. இந்த உலகப் பேரவலத்தில் இருந்து விடுபடுவதற்கு அரசஅறிவுறுத்தல்களையும், மருத்துவர்களின் ஆலோசனைகளையும் பின்பற்றுவதோடு இறைவழிபாடே எமக்கு வழிகாட்டும் என்பது தெளிவு.

வரலாற்றில் இம்முறைதான் வீட்டுக்குள் இருந்தபடி புத்தாண்டை வரவேற்க வேண்டிய இக்கட்டினுள் இருக்கின்றோம்.

இச்சூழலையும்மகிழ்வாகஎதிர்கொண்டு புதுவருடவழிபாடுகளை வீட்டில் இருந்தபடி மேற்கொள்வதோடு, இந்த இக்கட்டில் அல்லற்படுவோருக்கு இயன்ற தான தர்மங்களைச்செய்வோமாக,

அனைவர்க்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை சிறி சிவகாமசுந்தரி சமேத சிறிமத் நடராஜப் பெருமானை த் தயானித்துத்

# சித்திரையே சித்திரையே சிரித்து விடாதே !

சித்திரையே சித்திரையே சிரித்து விடாதே
சிரிப் புடைக்க சிறந்தவில்லன் தெரிவில் தெரிகிறான்
இத்தரையில் பிறந்துவிட்டால் சிரிக்கக் கூடாதா
சிரித்து விட்டால் சிறந்தவில்லன் முகத்தைச் சுழிக்கிறான்
சித்திரையே சித்திரையே சிரித்து விடாதே

சொல்லுக்கடங்காமல் கொரனோ
எம்மைப் பிடிக்க வருறான் - அவன்
தொல்லை ஒழிந்தொழிய தினம் நமது
எல்லையைக் காத்திடுவோம்

காணும் இடத்திலெல்லாம் அவன்
காட்சி நிறைந்திருக்கு
கனவு காணும் வேளை கொரனோ
கவி பாடி உலவுகிறான்

எந்தப் பொருளைத்தொட்டால் அவன்
எப்படி வருவானோ
சொந்த மனையாள் கூட சற்று
எட்டவே நில் என்கின்றாள்

சித்திரையே சித்திரையே சிரித்து விடாதே
சிரிப் புடைக்க சிறந்தவில்லன் தெரிவில் தெரிகிறான்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா - மெல்பேண் - அவுஸ்திரேலியா

# தினம் ஒரு தலைப்பு


## சித்திரப்போட்டி



மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்



படம் 1



படம் 2

இந்த மூன்று சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு – 'வயல் வெளி'

**படம் 1**
சண்முகம் நிதேஷ் – தரம் 9
ஹட்டன் ஹைலெவல் சர்வதேச பாடசாலை

**படம் 2**
பாசனா ஹர்ன் – தரம் 7
யா/ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'வாத்துக் கூட்டம்' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்ப்பப் பாடசாலை

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எம். எஸ். முகம்மட் கைஸ் - தரம் 1
கமு/ சது மகளிர் வித்தியாலயம் - சம்மாந்துறை

எவ். நஸ்மியா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

ஏ. எஸ். எவ். மனால் - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

டேவிராஜ் பிலெஷின் - தரம் 6
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

ஏ. ஆர். முஹம்மட் றிஸ்னி - தரம் 4
கமு/ சது அல் மனார் வித்தியாலயம் - சம்மாந்துறை

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிர மணிய வித்தியாலயம்

செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

த. சம்யுக்தா - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. சுதந்திரா - தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

ஆயிலை அகிலன் - தரம் 3
யா/சுண்டுகுளி மகளிர் கல்லூரி

ஜெயசாந்தன் வித்யாசாகர் - தரம் 2
யாழ். பரியோவான் கல்லூரி

ஆதிரை அகிலன்- தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

YARL HOSPITAL
PHARMACY
FREE DELIVERY
1 2 3
உங்கள் விட்டுக்கே மருந்துவகைகள் கட்டணம் இன்றி கொண்டுவந்து தரப்படும்
Minimum order value 500/=
Send item list to
077 7781003
077 3107685

## மட்டு. மாவட்டத்தில் ஊரடங்கு மீறில் 45 பேர் ஒரே நாளில் கைதாகினர்

மட்டக்களப்பு, ஏப்.14

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊரடங்கு சட்டத்தை மீறி வீதிகளில் நடமாடிய 45 பேரை நேற்றுக் காலை 6 மணி வரையிலான 24 மணித்தியாலயத்தில் தாங்கள் கைது செய்துள்ளமையுடன் 13 வாகனங்களைக் கைப்பற்றியுள்ளனர் எனவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் 13 பேரும், மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவில் 9 பேரும், வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் 3 பேரும், களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் 8 பேரும், கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் 4 பேரும், வவுணதீவு பொலிஸ் பிரிவில் 5 பேரும், காத்தான்குடி பொலிஸ் பிரிவில் மூவரும் என 45 பேர் ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதியில் நடமாடிய போது கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் நேற்று திங்கட்கிழமை காலை 6 மணிவரையிலான 24 மணித்தியாலயத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஓட்டிச் சென்ற ஓட்டோ, மோட்டார் சைக்கிள், லொறி ஒன்று உட்பட 13 வாகனங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை அவர்களின் உறவினர்களை அந்தந்தப் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்து அவர்களிடம் ஒப்படைத்தனர்.

மே மாதம் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு பொலிஸ் பிணையில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்

## சுவிற்ஸர்லாந்துப் போதகர் சற்குணராசா மீண்டும் இலங்கை வந்தால் கைதாவாராம்

யாழ்ப்பாணம், ஏப்.14

**யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றை பரப்ப காரணமானவர் என்று தெரிவிக்கப்படும் சுவிற்ஸர்லாந்து நாட்டின் போதகர் சற்குணராசா மீண்டும் இலங்கை வரும் பட்சத்தில் விமான நிலையத்தில் அவர் கைது செய்யப்படுவாரென உயர்மட்ட பாதுகாப்பு வட்டாரங்களை மேற் கோள்காட்டி செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

அவர் தொடர்பில் ஏற்கனவே நடத்தப்பட்ட விசாரணைகளில் பல முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் சுகாதார பாதுகாப்பு முன்னேற்பாடுகளைச் செய்யாமல் தெரிந்து கொண்டே அவர் நாட்டுக்குள் வந்திருந்தமைம தெரியவந்துள்ளதாகக் கூறும் பாதுகாப்புத் தரப்பு, அவருக்குப் பிரயாணம் செய்ய அனுமதி கொடுத்தவர்களிடம் தனி விசாரணைகள் நடந்து வருவதாகவும் குறிப்பிட்டன.

அவரின் விவரங்கள் இலங்கையின் விமான நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன என வும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.



சம்பந்தப்பட்ட போதகர் சற்குணராசா சுவிஸில் தற்போது நோயிலிருந்து தேறித் தமது வழமையான போதகர் பணியை ஆற்றிவருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது


சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்,
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் -

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016


பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012

# ஆழ்கடலில் கப்பல் மாலுமிக்குக் கொரோனா? இங்கு சிகிச்சை தர மீட்டு வந்தது கடற்படை!







சர்வதேச கொள்கலன் கப்பலின் மாலுமியொருவருக்கு கொரோனா அறிகுறி தென்பட்டதையடுத்து, அவர் மருத்துவ பரிசோதனைகளிற்காக கொழும்பு துறைமுகத்திற்குப் பாதுகாப்பாகக் கொண்டு வரப்பட்டுள்ளார்.

லைபீரியாவைச் சேர்ந்த கொள்கலன் கப்பலான எம்.எஸ்.சி.ரொரான்டோ என்ற கப்பலுக்கு சேவைகளை வழங்கும் உள்ளூர் நிறுவனமான எம்.எஸ்.சி. லங்காவால் கோவிட் 19 ஐத் தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்திற்கு இன்று கோரிக்கை விடுக்கப்பட்டது. இலங்கைக்கு அணமைய கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருக்கும் மேற்படி கப்பலின் மாலுமியொருவருக்கு கொரோனா அறகுறிகள் தென்படுவதால், அவருக்கு சிகிச்சையளிக்க வேண்டுமெனக் கோரப்பட்டது.

இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலுடன், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வாவின் நேரடி மேற்பார்வையில், கடற்படையினர் 36 வயதான மாலுமியை கொழும்பு துறைமுகத்திற்கு அழைத்து வந்தனர்..

கடற்படையின் வேதியியல், உயிரியல், கதிரியக்க மற்றும் அணுசக்தி அவசரநிலை பிரிவு கொழும்பு துறைமுகத்திலிருந்து 5 கடல் மைல் தொலைவில் கப்பலை அணுகியது. அங்கிருந்து அவர் அழைத்து வரப்பட்டு, சுவசிரிய நோயாளர் காவு வண்டி மூலம் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். இதனையடுத்துத் துறைமுகப் பகுதி முழுமையாக கிருமிநீக்கம் செய்யப்பட்டது.

# தொற்றுக்குள்ளானால் தயவு செய்து உண்மை நிலையை சொல்லுங்கள்!

## முஸ்லிம்களிடம் இராணுவத் தளபதி கோரிக்கை



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான முஸ்லிம்கள் யாரும் இருப்பார்களாயின் அவர்கள் வெளியே வந்து உண்மை நிலையை சொல்ல வேண்டுமென இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா கோரிக்கை விடுத்துள்ளார். ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு :-

கொரோனா தொற்று இருந்து தனிமைப்படுத்தலுக்கு உள்ளானால் ரமழான் நோன்பு பிடிப்பது சிரமமென்றும் அதனால் நோய் அறிகுறிகள் இருந்தால் சொல்லாமல் இருப்போம் என்றும் யாரும் நினைத்து விடாதீர்கள். நோன்பு திறப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளையும் தொழுகை நடக்க வேண்டுமாயின் தேவையான ஏற்பாடுகளையும் தனிமைப்படுத்தல் முகாம்களில் செய்ய இராணுவம் தயாராகவே உள்ளது.எனவே யாரும் அச்சப்பட வேண்டாம். – என்று தெரிவித்துள்ளார் இராணுவத்தளபதி

# வீதியில் சிவிலியன்களைத் தண்டித்த இரு பொலிஸார் பணி இடை நீக்கம்

நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டத்தைமீறிவீதியில்நடமாடியநால்வருக்குத் தம்மிஷ்டப்படி தண்டனை வழங்கிய இரண்டு பொலிஸ் உத்யோகத்தர்கள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

ஊரடங்குச்சட்டம் அமுல் இருந்த காலப்பகுதியில் மருதானை டார்லி வீதியில் நால்வருக்கு அங்கு கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் இருவர் தண்டனை வழங்கி எச்சரித்தமை தொடர்பான காட்சிகள் தனியார் தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் ஒளிபரப்பானது.

கொழும்புநகரத்திற்கு உட்பட்டு சேவையாற்றிய இரண்டு போக்குவரத்து பொலிஸாரே பணி இடைநீக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

கட்டளையை மீறியமை, அபகீர்த்தி ஏற்படும் வகையில் நடந்துக்கொண்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் இவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய குறித்த பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஊரடங்கு சட்டத்தை மீறுவோரை கண்டுபிடிப்பதற்கான விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை நேற்று மாலை 6 மணி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.





காலைக்கதிர் Kalaikathir

வயல் வெளி



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கானது

தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

இன்று (14/04/2020) தலைப்பு
வயல் வெளி

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.04.2020 இல் வெளியிடப்பெற்றது.